
# ஒற்றுமை மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான கலப்பற்றதோர் அழைப்பு

28 டிசம்பர் 1991 அன்று காதியான் ஆண்டு மாநாட்டின் நூற்றாண்டு விழாவில் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய நிறைவுரை



# ஒற்றுமை மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான கலப்பற்றதோர் அழைப்பு

**28** டிசம்பர் **1991** அன்று காதியான் ஆண்டு மாநாட்டின் நூற்றாண்டு விழாவில் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய நிறைவுரை


வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

Tamil Translation of the book

# Ittehad aur quomi taraqqi ke liye pur khuloos dawat

## ஒற்றுமை மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான கலப்பற்றதோர் அழைப்பு


| | |
|---|---|
| **Author** | **Hazrat Mirza Tahir Ahmad Khalifatul Masih IV(rh)** |
| **Translated by** | **Maulavi O.M.Muzzammil Ahmad H.A** |
| **Composed by** | **Maulavi O.M.Muzzammil Ahmad H.A** |
| **Book set by** | **Maulavi A.P.A. Thariq Ahamed** |
| **First Edition** | **February 2023** |
| **Copies** | **500** |
| **Publisher** | **Nazarat Nashr-o-Isha'at, Qadian, Gurdaspur District Punjab - 143516** |
| **Printed at** | **Fazl-e-Umar Printing Press, Qadian** |

| | |
|---|---|
| நூலாசிரியர் | நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் |
| தமிழாக்கம் | மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A |
| தட்டச்சு | மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A |
| வடிவமைப்பு | மவ்லவி A.P.A. தாரிக் அஹமது |
| முதல் பதிப்பு | பிப்ரவரி 2023 |
| பிரதிகள் | 500 |
| வெளியீடு | நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியான், குர்தாஸ்பூர் மாவட்டம் பஞ்சாப் - 143516 |
| அச்சகம் | ஃபஸ்லே உமர் பிரிண்டிங் பிரஸ், காதியான் |


***National Toll Free No: 1800 103 2131***

***Tamil Toll Free No: 1800 425 40000***

## வெளியீட்டாளரின் முன்னுரை

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சார்பாக 2017 ஆம் ஆண்டின் இந்திய மஜ்லிஸே ஷூராவால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஆலோசனைக்கேற்ப ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் காதியானில் 28.12.1991 அன்று நடைபெற்ற நூற்றாண்டு மாநாட்டில் ஆற்றிய கருத்தாழமிக்க, வரலாற்றுச் சிறப்பு மிக்க சொற்பொழிவு சிறு நூல் வடிவில் வெளியிடப்படுகிறது.

இந்த சொற்பொழிவில் சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சமுதாய ஒற்றுமை, அமைதியை நிலைநாட்டுவதற்கான அவசியமான முன்னேற்பாடுகளை மேற்கோள்வது பற்றி அழுத்தம் கொடுத்துள்ளார்கள். நமது நாட்டின் எல்லா மார்க்கங்கள், சமுதாயங்கள், இயக்கத்தின் மக்கள் விலைமதிக்க முடியாத இந்த திட்டங்களின்படி செயல்பட்டு வேற்றுமைகளிலும் ஒற்றுமையை நிரூபித்துக் காண்பித்தவாறு நமது நாட்டின் ஒளிரும் எதிர்காலத்திற்காக பணி செய்வோம்.

மஜ்லிஸே ஷூராவின் ஆலோசனைக்கு ஏற்ப இந்த நூலை வெளியிடுவதுடன் இந்தியாவின் மாநில மொழிகளிலும் இதன்

மொழியாக்கங்கள் வெளியிடப்படுகின்றன. மேலும் இதுவரை பல மொழிகளில் வெளியிடப்பட்டும் இருக்கின்றன.

அல்லாஹ் இந்த நூலை எல்லா வகையிலும் மக்களுக்கு பயனுள்ளதாக ஆக்குவானாக! ஆமீன்.

**நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான்**

## பதிப்புரை

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 28 டிசம்பர் 1991 ஆம் ஆண்டு காதியான் நூற்றாண்டு விழா ஆண்டு மாநாட்டில் ‘இத்திஹாத் அவ்ர் கவ்மீ தர்கீ கே லியே புர்குலூஸ் தஃவத்’ (ஒற்றுமை மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான கலப்பற்றதோர் அழைப்பு) என்ற தலைப்பில் ஆற்றிய நிறைவுரையை மதிப்பிற்குரிய மவ்லவி **O.M.** முஸ்ஸம்மில் அஹ்மது **H.A** அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி **S.** அப்துல் காதிர் சாஹிப் அவர்களும், முஅல்லிம் **M.** ஷாஜஹான் சாஹிப் அவர்களும், மவ்லவி அத்தாவுல் முஃக்னீ சாஹிப் அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள். அவ்வாறே, தமிழ் ரிவ்யூ கமிட்டி தலைவர் **J.S.** சலீம் அஹ்மது சாஹிப் அவர்களும், மவ்லவி **A.P.A.** தாரிக் அஹ்மது சாஹிப் அவர்களும் இந்த நூலின் தமிழாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்
எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
நாஸிர் நஷ்ரோ இஷாஅத், காதியான்

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஒற்றுமை மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான கலப்பற்றதோர் அழைப்பு

**காதியான் ஆண்டு மாநாட்டின் நூறாவது ஆண்டின் போது சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நிறைவுரையாக 28.12.1991 அன்று ஆற்றிய கருத்தாழம் மிக்க வரலாற்றுச் சிறப்பு மிக்க சொற்பொழிவு**

தஷஹ்ஹுது, தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

சிறப்பான வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆண்டு மாநாடு மிகவும் தூய சூழலில், மிகவும் ஈமானை வலுவூட்டும் காட்சிகளுடன், மிகவும் அருமையாக தனது நிறைவு நேரத்தை எட்டுகிறது. இது அல்லாஹ்வின் எல்லையற்ற அருளாகும். இந்த மாநாடு பல வகையில் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு வரும் முதல் ஆண்டு மாநாடு, பின்னால் வரக் கூடிய ஒவ்வொரு நூற்றாண்டு மாநாட்டை விடவும் தனிச் சிறப்பைக் கொண்டதாகும். மேலும், இந்த மாநாடு 44 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு 45 ஆவது ஆண்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

(அலை) அவர்களின் கலீஃபாவுக்குக் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பு கிடைக்கின்ற மாநாடும் ஆகும். இந்த மாநாட்டில் இந்திய ஜமாஅத்துகள் எந்த அளவுக்கு அதிகமாக கலந்து கொண்டுள்ளன என்றால், ஆண்டு மாநாட்டின் நூற்றாண்டு வரலாற்றில் இன்று வரை ஒருபோதும் அந்த மாநிலங்களிலிருந்தும் தொலைதூர இடங்களிலிருந்தும் ஜமாஅத்துகள் இந்த அளவுக்கு அதிகமாகக் கலந்து கொண்டதில்லை.

காஷ்மீரில் இருந்தும் ஆச்சரியமான முறையில், எதிர்பார்ப்பையும் விட அதிகமாக விருந்தினர்கள் வந்துள்ளனர். காஷ்மீரிலிருந்து வந்த ஏற்பாட்டாளர்களிடம் நான் கேட்ட இறுதி விபரத்தின்படி, ஏறத்தாழ **3000** மனத் தூய்மை கொண்ட காஷ்மீர் அஹ்மதிகள் இங்கு வருகை தந்துள்ளதாகக் கூறினர். ஒடிசா ஒரு தொலை தூர மாநிலமாகும். அங்கிருந்து இங்கு வருவதற்கு மூன்று இரவு மூன்று பகல் கடினமான பயணம் மேற்கொள்ள வேண்டியது வருகிறது. ஜமாஅத் மிகவும் ஏழை ஜமாஅத் ஆகும். ஏழையாக இருந்தாலும் வாய்ப்புக்கேற்ப முறைப்படி சந்தா கொடுக்கின்ற ஜமாஅத்துகளாகும். அங்கு பெரும்பாலும் காலநிலை வெப்பமாக இருக்கிறது. அல்லது குறைந்த வெப்பமாக இருக்கிறது. குளிர் இருப்பதில்லை. அப்படி இருந்தும் இவ்வளவு குளிர் காலத்தில் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் ஒடிசாவின் நண்பர்களும் பெண்களும் இங்கு

வந்து விட்டனர். கேள்வி பதில் கூட்டத்தில் நான், உங்களில் எத்தனை பேருக்கு இதற்கு முன் காதியான் வரும் வாய்ப்பு கிடைக்கவில்லை எனக் கேட்டேன். ஆக இந்த மாநாடு இந்த வகையிலும் பல அருள்களைக் கொண்டுள்ளது. ஆனால் இப்போது அந்த விஷயங்களை எடுத்துரைப்பதற்காக நான் நிற்கவில்லை. கூடுதலாக இவ்விஷயங்களை குறிப்பிட்டேன்.

நான் உண்மையான கருத்தின் பக்கம் வருவதற்கு முன் ஒரு விஷயத்தைக் கூறுவதை அவசியமானதாகக் கருதுகிறேன். இந்த ஆண்டு மாநாட்டின் வெற்றிக்கு காதியானிலுள்ள முஸ்லிம் அல்லாதவர்களின் ஒத்துழைப்பு, அவர்களின் அன்பு, அவர்களின் கலப்பற்றதன்மை ஆகியவற்றிக்கு அசாதாரணமான பங்கு இருக்கிறது. இந்தியா பாக். பிரிவினைக்குப் பிறகு இங்கு வந்து குடிபெயர்ந்த மக்கள் இவ்வளவு திறந்த துணிவுடனும், திறந்த மனதுடனும், நம்மை வரவேற்பார்கள்; இந்த அளவுக்கு அன்பை வெளிப்படுத்துவார்கள் என்பதை நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. எனக்கு மாநாட்டின் அதிகாரி மூலமாக கிடைத்த செய்தி என்னவெனில், இருப்பிடங்களின் குறைவு பற்றிய உணர்வு நமக்கு ஏற்பட்டபோது, இங்கு தர்வேஷ்களின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. வரக்கூடியவர்களின் எண்ணிக்கை எல்லா எதிர்பார்ப்புகளையும் விட அதிகமாகி விட்டபோது, நேற்றைய தினத்தின் எண்ணிக்கை

22,000 விட அதிகமாக இருந்தது; அநேகமாக மொத்தம் 13,000 விருந்தினர்கள் இங்கு வரக் கூடும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் 22,000 க்கும் அதிகமானோர் மாநாட்டு திடலிலேயே கணக்கிடப்பட்டிருக்கும் போது அதன் பொருள், அதை விட அதிகமான ஆண்களும், பெண்களும் இருக்கின்றனர் என்பதாகும். பலர் தத்தமது பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள முடிவதில்லை.

எப்படி இருந்தபோதிலும், மாநாட்டின் அதிகாரி அப்பொழுது கூறினார்: காதியானிலுள்ள சில சீக்கிய பெருமக்கள் இதை அறிந்து அவர்களே நம்மிடம் வந்தனர். மிகவும் வற்புறுத்தி நமது விருந்தினர்களை மிகவும் கண்ணியத்துடனும், அன்புடனும் தமது வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். முந்தைய காலத்தில் காதியானில் பல்வேறு பகுதிகளில் பெரும்பாலான விருந்தினர்களுக்கு இடம் கிடைத்தது போன்று இம்முறையும் மார்க்க வித்தியாசம் இருந்தும், பாகிஸ்தானுடனும் அரசியல் வேற்றுமையும் இருக்கிறது. அப்படி இருந்தும் வெளியிலிருந்து வந்திருந்த விருந்தினர்களுடன் - அவர்கள் எந்த நாட்டில் இருந்து வந்தவர்களாக இருந்தாலும்; இங்கு உள்ளவர்கள் மிகவும் அன்புடனும், பரிவுடனும் நடந்து கொண்டார்கள். அல்லாஹ் அவர்கள்

அனைவருக்கும் மிகச் சிறந்த நற்கூலியை வழங்குவானாக!

மனிதத்துவம் என்பது மார்க்கத்தின் முதல் படியாகும். மனிதத்துவம் கிடைத்து விட்டால் பிறகு இறைவன் பக்கம் செல்வதற்கான எஞ்சிய வழிகள் எளிதாகி விடுகின்றன. மேலும் எவர்கள் இறைவனின் வழியில் செல்கிறார்களோ அவர்களுக்குக் கண்டிப்பாக மனிதத்துவம் கிடைத்து விடுகிறது. எந்த அளவுக்கு அவர்கள் இறைவனுக்கு நெருக்கமாக ஆகிக்கொண்டு செல்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களிடம் மனிதனைப் பற்றிய மதிப்பும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இவை இரண்டும் ஒன்று மற்றொன்றை சார்ந்துள்ளது.

எனவே இந்த வகையில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. மார்க்க வேற்றுமைகள் ஒருபுறம் இருந்தாலும் இங்கு நமது சூழலில் மனிதத்துவத்தின் மதிப்பு பாதுகாக்கப்படுகிறது. அந்த விளக்கை ஒளிமயமாக வைத்திருக்கின்ற மக்கள் உள்ளனர். அல்லாஹ் இவர்களின் உள்ளங்களுக்கும் ஒளியை வழங்குவானாக. இவர்களின் சிந்தனைக்கும் ஒளியை வழங்குவானாக. மேலும் ஏக இறைவனின் அன்பில் திழைத்தவாறு இறைவன் வரை சென்றடைய வைக்கின்ற ஒவ்வொரு வழியையும் மேற்கொள்வார்களாக!

இப்போது நான் உங்கள் கவனத்தை இதன் பக்கம் திருப்ப விரும்புகிறேன். உலகில் மிகவும்

விரைவாக புரட்சிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. உலகின் நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக நான் ஆண்டு மாநாட்டின் துவக்கவுரையில் ஓரளவுக்கு விளக்கிக் கூறியிருக்கிறேன். மேலும் அதிக விளக்கமாக இந்த கருத்தின் பக்கம் செல்ல விரும்பவில்லை. ஆனால் இந்த மாற்றங்களுக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடன் ஆழமான தொடர்பு இருக்கிறது என்பதைக் கூறுவது அவசியமாகும்.

ரஷ்ய புரட்சி உலகில் ஒரு மாபெரும் முக்கியமான பங்கு வகித்தது. உலகத்தை பல்வேறு கோணத்தில் பிரித்தது. இதற்கு முன் பிரிவினையின் நிலை வேறு வகையில் இருந்தது. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்த ரஷ்யப் புரட்சி 1918, 1919-ஆம் ஆண்டுகளில் மிக விரைவாக செயல்பட்டது. அது தனது முழுமையை எட்டியது. இந்த புரட்சியின் சிறப்புத்தன்மை என்னவெனில், உலகம் புதிய பிரிவுகளாகப் பிரிந்தது. இதற்கு முன் வெள்ளையர் கருப்பர் என பிளவுபட்டு வடக்கு தெற்கு, கிழக்கு மேற்கு என்று பிரிந்து இருந்தது. ஆனால் ஏழை, பணக்காரன் என்ற கோணத்தில் முதன் முறையாக உலகத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்துவிட்டது. இந்தப் புரட்சி, ரஷ்ய வகுப்புவாதம் உடைந்ததனால் உருவானது.

இப்போது உலகில் உருவான ஒரு புதிய புரட்சியில் ரஷ்யா, சென்ற 70 ஆண்டுகளில்

தனது புதிய கொள்கைகளினால் என்னவெல்லாம் பெற்றதோ அவற்றை ஒரேயடியாக இழந்து விட்டது. மேலும் நமக்கு ஏதும் கிடைக்கவில்லை என்பதை ஒப்புக் கொண்டது. நஷ்டமும் இழிவும்தான் ஏற்பட்டது. அதன் விளைவாக திடீரென்று உலகில் ஒரு பூகம்பம் போன்ற நிலை உருவாகி விட்டது. மேலும் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமான கருத்துகளை வெளியிட்டனர்.

அந்தக் கருத்துகளில் எந்த அளவுக்கு உண்மையும் உயிரும் இருக்கிறது? அவர்களின் சிந்தனைகள் எந்த அளவுக்கு சரியான திசையில் இருக்கின்றன என்ற வாதத்தை ஒட்டு மொத்தமாக ஒருபுறம் வைத்து விட்டு, இந்த இரண்டு புரட்சிகளைப் பற்றியும் நமது இறைவன் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு முன்னரே செய்தி தெரிவித்திருந்தான் என்பதை நான் கூற விரும்புகிறேன். மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் அறிவித்திருந்தான்.

எனவே, இந்த புரட்சிகளின் விளைவாக என்ன தோன்றப் போகிறது என்பதைப் பற்றி உலகின் அனுமானம் என்னவாக இருந்தாலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்தவரை என்ன வெளிப்பட்டாலும், அது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு சாதகமாக சிறப்பாக இருக்கும். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றத்தின் ஒரு வழிவகையாக நிரூபணமாகும் என்பதில் முன்னரும் அதில் உறுதி இருக்கிறது. மேலும் இந்த நிலைமைகள்

வெளிப்பட்ட பிறகு இந்த உறுதி மேலும் அதிகமாகி விட்டது. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றத்திற்கு ஒரு வழிவகையாக நிரூபணமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று ரஷ்யா மன்னராட்சியின் அழிவு மற்றும் வேதனை மிக்க நிலைமையை தனது ஓர் உருது கவிதையில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்கள். அந்தக் கவிதை ஓர் உலகளாவிய பூகம்பத்தைப் பற்றியதாக இருந்தது. பூமியதிர்ச்சி என்ற கோணத்தில் அது குறித்து அல்லாஹ் அவர்களுக்குத் தெரிவித்திருந்தான்.

ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகத் தெளிவான முறையில் இந்த உலகளாவிய பூகம்பம் என்பது வெளிப்படையான பூகம்பம் என்ற கோணத்தில் வெளிப்படும் என்பது அவசியமில்லை; முழு உலகத்தையும் உலுக்கி விடுகின்ற மாபெரும் உலகளாவிய சோதனைகளும் பூகம்பத்தைப் போன்றவையாகும் என்று தெளிவாக எழுதினார்கள்.

எனவே அது என்ன சோதனையாக இருக்கும் அல்லது கொள்ளை நோய்களாக இருக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பயங்கரமான, படிப்பினையூட்டக் கூடிய ஓர் அடையாளம் வெளிப்படவிருக்கிறது. முழு உலகமும் அதற்கு சாட்சியாக இருக்கும் என்று

எழுதினார்கள். அந்தக் கவிதையில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

'மனிதனும், மரமும், கல்லும், கடலும் ஒவ்வொன்றும் ஒரு பூகம்பத்தால் நடுநடுங்கப் போகின்றன.'

இப்போது பாருங்கள்! இவ்வளவு பரந்த அளவில் மரங்கள், பறவைகள், வீடுகள், மனிதர்கள், கடல்கள் ஆகியவை தாக்கத்திற்கு உள்ளாகும் அளவுக்கு பூகம்பங்களினால் நிலைமைகள் மாறுவதில்லை.

'கண் இமைக்கும் நேரத்தில் இந்த பூமி தலை கீழாகி விடும். ஓடையில் ஓடும் தண்ணீரைப் போன்று இரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடும். இரவில் மல்லிகையைப் போல் தூய வெண்ணிற ஆடைகளை வைத்திருந்தவர்களின் ஆடைகளை காலை நேரம் மாசடைந்ததாக ஆக்கி விடும். புறாக்களும் குயில்களும் தம் கீதங்களை மறக்கும். மனிதர்களும் பறவைகளும் கூட குலை நடுங்கிப்போவர். அச்சத்தால் ஜின்களும் மனிதர்களும் செய்வதறியாது திகைத்துப் போவர். ரஷ்யாவின் அதிபர் ஸார் மன்னர் கூட அந்த நேரத்தில் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பார். பெரும் தண்டனைக்கு ஆளாகி இறைவனின் அடையாளமாகியிருப்பார். தனது வாளை உருவி வானம் தாக்குதல் தொடுக்கும்.'(ரூஹானி கஸாயின், பராஹீனே

அஹ்மதிய்யா, பகுதி 5 தொகுதி 21 பக்கம் 151, 152)

இப்போது, “அந்த நேரத்தில் ஸார் மன்னனும் பலவீனமான நிலையில் இருப்பான்” என்ற கவிதை வரி மிகவும் சிந்திக்கத்-தக்கதாகும்.

ஏனெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தக் கவிதையைக் கூறும்போது ஸார் அரசாங்கம் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு அடுத்தபடியாக அல்லது அதற்குச் சமமாக உலகத்தின் மிகப் பெரிய கம்பீரமான, மிகப் பெரிய மதிப்புள்ள அரசாங்கமாக இருந்தது. மேலும் ஸா(ர் பேரரச)ரின் ஆட்சியின் பயத்தினால் ஐரோப்பாவிலுள்ள சிறிய பேரரசர்கள் நடுங்கிக் கொண்டிருந்தனர். ஸார் அரசரின் அச்சத்தினால் உலக சமுதாயங்களுக்கு அதிர்ச்சிகள் ஏற்பட்டன. அப்படிப்பட்ட காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஸாரும் இருப்பார் எனக் கூறுகிறார்கள். அதாவது எந்த நாளைப் பற்றி நான் கூறுகிறேனோ அந்த நாளில் ஸார் மன்னரைப் பற்றி முழு உலகத்திலுள்ள பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக செய்தி வெளியிடப்படலாம் என்றார்கள்.

உருது பத்திரிகையில் ‘ஸாரின் மோசமான நிலை’ என்றே (தலைப்புச் செய்தி) இருந்தது.

ஆங்கிலம் மற்றும் பிற மொழிப் பத்திரிக்கைகளும் இந்தக் கருத்தையே தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தன.

நிச்சயமாக இது இறைவனின் சொல்லாக இருந்தது. அது இந்த அடையாளத்துடன் நிறைவேறியது! ஆனால் எதிர்மறை அம்சத்தைக் கொண்ட இந்த விஷயம் மட்டும் அல்ல. அதாவது, ஏதோ ஒரு தீய மன்னரின் அழிவு மற்றும் நாசத்தைப் பற்றி மட்டும் அல்ல. மாறாக, அதற்குப் பிறகுள்ள இல்ஹாம்கள் ரஷ்யாவின் புரட்சிகளுக்குப் பிறகு அங்கு அஹ்மதிய்யத்தை ஊக்குவிப்பதற்கான, வளர்ச்சி அடையச் செய்வதற்கான செய்தியைத் தெரிவிக்கின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அந்த இரவிலேயே நான் கனவில் கண்டேன். ரஷ்ய மன்னரின் செங்கோல் எனது கையில் உள்ளது. மேலும் அதில் மறைவாக துப்பாக்கியின் துளையும் இருக்கிறது. இரண்டு வேலையையும் செய்கிறது. பிறகு பூஅலீ சீனா எவருடன் இருந்தாரோ அந்த மன்னரின் வில் என்னிடம் இருக்கிறது. (பூஅலீ சீனா என்பவரும் ரஷ்ய பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.) மேலும் நான் அந்த வில்லின் மூலமாக ஒரு சிங்கத்தை நோக்கி அம்பை எய்துகிறேன். அநேகமாக பூஅலீ சீனாவும் எனக்கு அருகில் நிற்கின்றார். அந்த மன்னரும் நிற்கின்றார். (இல்ஹாமாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) பக்கம் 4,

தஸ்கிரா பக்கம் 458, 459. 1969-ஆம் ஆண்டு, ரப்வா பதிப்பு)

இன்றும் பூஅலீ சீனாவுக்கு ரஷ்யாவின் கிழக்கிலுள்ள முஸ்லிம் பகுதிகளில் எந்த அளவுக்கு மகத்துவம் இருக்கின்றதோ அந்த அளவுக்கு மகத்துவம் அரிதாகவே உலகில் வேறு எந்த அறிஞருக்கும் கிடைத்திருக்கும்.

இங்கிலாந்து மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த ரஷ்யர்கள் என்னிடம் கூறினார்கள். மேலும் முதன்முதலாக அவர்களின் மூலமாகவே எனக்கு தெரிய வந்தது. புகாரா, தாஷ்கண்டு போன்ற பகுதிகளில் பூஅலீ சீனா அவர்களின் நூலாகிய அல்கானூன், எந்த அளவு அனைவரின் உள்ளத்தையும் ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது என்றால், அது எந்த மார்க்கெட்டிலும் ஒருபோதும் கிடைப்பதில்லை. அச்சாகியதும் உடனே கையோடு கையாக விற்பனையாகி விடுகிறது. இந்த இடங்களில்தான் சிறப்பான முறையில் இந்த புதிய காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனம் திரும்பி இருக்கிறது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ‘‘நான் ரஷ்யாவின் இடங்களில் எனது ஜமாஅத்தை மணலைப் போன்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்’’ என எழுதியுள்ளார்கள். (ரிஜிஸ்டர் ரிவாயாத்தே

சஹாபா தொகுதி 12 பக்கம் 114, தஸ்கிரா பக்கம் 813. 1969 ஆம் ஆண்டு, ரப்வா பதிப்பு)

அதாவது அதிகமான எண்ணிக்கையில் பரவியிருக்கக் காண்கிறேன். இவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளாகும். இவற்றிற்கு ரஷ்யாவின் ஸாருடைய புரட்சியுடன் தொடர்பு இருக்கிறது. பிறகு, நீண்ட காலத்திற்குப் பின்னர் வெளிப்படவிருக்கும் நிகழ்ச்சிகளுடனும் தொடர்பு இருக்கிறது.

இப்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் ஓர் ஆன்மீகக் கனவை உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறேன். அது அல்ஃபஸ்ல் பத்திரிக்கை 30 மே 1947 தொகுதி 35/138-ல் வெளியாகியுள்ளது. முதலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பில், ஸார் மன்னராட்சி அழிந்து விடும்; அதற்குப் பிறகு இன்னோர் ஆற்றல் ரஷ்யாவை ஆக்கிரமித்துக் கொள்ளும் என்ற ரஷ்யாவின் புரட்சியைப் பற்றிய குறிப்பு உள்ளது.

இப்பொழுது இந்த இரண்டாவது ஆற்றலும் நாசமாகப் போகின்றது; அதற்குப் பிறகு உலகில் புதிய நிலைமைகள் வெளிப்படும் என அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுக்கு அறிவித்தான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

‘‘நேற்று முன் தினம் அல்லது அதற்கும் முன்தினம் இரவு வேளையில் எனது கண் திறந்தபோது மிகவும் அழுத்தமாக எனது உள்ளத்தில் இந்தக் கருத்து இறங்கிக் கொண்டிருந்தது. (இது கனவு அல்ல; மாறாக ஆன்மீகக் காட்சி அல்லது இல்ஹாம் போன்ற ஒரு நிலையாகும்.) பிரித்தானியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் ஒரு **Modified Treaty** ஆகிவிட்டது. (திருத்தப்பட்ட ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது.) அதன் காரணமாக மத்திய கிழக்கு பகுதிகளின் இஸ்லாமிய நாடுகளில் மிகவும் நிம்மதியற்ற நிலையும் கவலையும் பரவி விட்டது.

**Modified** என்பதன் பொருள், திருத்தப்பட்ட என்பதாகும். அநேகமாக வெளிப்புறத்திலுள்ள அழுத்தம் மற்றும் சில அபாயங்களின் காரணமாக பிரித்தானியா ரஷ்யாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ளும். அதன் காரணமாக ரஷ்யாவின் அழுத்தம் மத்திய கிழக்கு நாடுகளில் அதிகமாகி விடும் என இந்தச் சொற்கள் சுட்டிக் காட்டுகின்றன என்று நான் கருதுகிறேன். அப்போது எனது சிந்தனையில் ஈராக், பாலஸ்தீனம், சிரியா ஆகிய நாடுகள் வந்தன. அதாவது ரஷ்யாவும் பிரித்தானியாவும் ஒப்பந்தம் செய்து கொண்ட காரணத்தினால் அந்த நாடுகளில் பதற்றமும் கவலையும் உருவாகும்.

ரஷ்யாவைக் கடுமையாக எதிர்த்து வந்த ஆங்கிலேயர்கள் இந்த உடன்படிக்கையை எந்த அடிப்படையில் செய்தனர்? நிரந்தரமான, இறுதியான நிலைமையைப் பொருத்தவரை இந்தச் சமுதாயங்களில் போர் கண்டிப்பாக நடைபெறும் என திருக்குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் தெரிகின்றது.

ஆனால் சில நேரங்களில் அரசியல் குறிக்கோள்களுக்காக எதிரியின் அழுத்தத்தை குறைப்பதற்காக அல்லது எந்த ஆபத்தும் இருக்கக் கூடாது என்பதற்காக அதனுடைய தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக அரசாங்கங்கள் தற்காலிகமாக சமாதானம் செய்து கொள்கின்றன. ஆங்கிலேயர்கள் ரஷ்யாவின் எண்ணத்திலிருந்து தனது பாதுகாப்பு அம்சத்தை உறுதி செய்வதற்காகக் கட்டாயத்தின் பேரில் ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வர் எனத் தெரிகிறது. அரசியல் அழுத்தங்கள் சில நேரங்களில் மாபெரும் விளைவுகளை உருவாக்கி விடுகின்றன. மேலும் அரசாங்கங்கள் இந்த அழுத்தங்களின் காரணமாக அப்படிபட்ட அடியை எடுத்து வைக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி விடுகின்றன. எப்போதும் ரஷ்யாவின் பயனுள்ள வழிகளில் தடையாக இருந்து வந்த பிரித்தானியாவும் அமெரிக்காவும் இப்போது சில அரசியல் நிலைமைகளின் காரணமாக அல்லது குறிக்கோள்களின் காரணமாக அதனை எதிர்ப்பதை விட்டு விடும்

எனத் தெரிகிறது. மறுபக்கம், சில விஷயங்களில் பிரித்தானியாவையும் அமெரிக்காவையும் எதிர்த்துக் கொண்டிருந்த ரஷ்யாவும் அவற்றை எதிர்ப்பதை விட்டு விடும்.''

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்த ஆன்மீகக் காட்சி எவ்வளவு தெளிவாகவும், துல்லியமாகவும் நிறைவேறி விட்டது எனில், அதைப் படித்து மிகவும் வியப்பு ஏற்படுகிறது. குறிப்பாக ரஷ்யாவின் ஆற்றல் சீர்குலைந்து போனதால் எல்லாவற்றையும் விட அதிகமாக பாதிப்பு ஏற்பட்ட மூன்று நாடுகள் ஈராக், சிரியா, பாலஸ்தீனம் ஆகியவையாகும்.

அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு ஆன்மீகக் காட்சியில் இந்த மூன்று நாடுகளைக் காட்டினான். மேலும் அவற்றைக் குறித்து பொதுவாக முஸ்லிம்களைக் கவலை கொள்பவர்களாகக் காட்டினான். இவ்விதமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலைமைகள் இறை நியதிக்கேற்ப சில மாற்றங்கள் உலகத்தில் வரவிருக்கின்றன என்பதைத் தெரிவிக்கின்றன.

மேற்கத்திய சமுதாயங்கள், தமது விருப்பம் மற்றும் ஆசைகளுக்கேற்ப உலகின் புதிய வரைபடம் உருவாகும் என கருதுகின்றன. மேலும் கிழக்கத்திய சமுதாயங்களைச் சேர்ந்த பல சமுதாயங்கள் உண்மையில் முழு உலகின் பலவீனமான சமுதாயங்களை நிரந்தரமாக

அடிமையாக வைத்திருப்பதற்காக உருவாக்கி வைத்திருக்கும் கட்டமைப்பை தமது சாதுவான பண்பினாலும் அறியாமையினாலும் அல்லது தன்னலத்தின் விளைவாகவும் இந்த வரைபடம் உருவாக்க அவர்களுக்கு ஒத்துழைத்து வந்திருக்கின்றன. மேலும் ஏழை நாடுகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்க்கை நடத்துவதற்கு பழக்கமாகி விட்டன. இவ்வாறான உட்புறமான பிரிவினையின் விளைவாகப் பணக்கார நாடுகள் எவ்வாறு அவர்களுடன் அநீதியுடன் நடந்து கொள்கின்றன என்பதைப் பற்றியும், மிக தொலைவு வரை செல்லக் கூடிய தனது அரசாங்கத்தை வெகு தொலைவு வரை பிணைக்கும் சங்கிலிகளில் எவ்வாறு மாற்றி விடுகின்றனர் என்பதைப் பற்றியும் அவர்கள் சிந்தித்துக் கூடப் பார்க்க முடியாது.

ஆனால், இன்றைய தலைப்பு அரசியல் அல்ல. நான் கூறிக் கொண்டிருக்கின்ற விஷயங்கள் வெளிப்படையாகப் பார்க்கும்போது அரசியல் சார்ந்தவையாக இருக்கின்றன. இருந்தாலும் நான் தெளிவுபடுத்த இருப்பதைப் போன்று, தலைப்பு அரசியல் அல்ல. மாறாக, கலப்பற்ற முறையில் மார்க்கத்துடனும், மனித அனுதாபத்துடனும் தொடர்புடையதாகும்.

நான் எத்தகைய நிலையை உங்களுக்கு முன்னால் வைத்திருக்கிறேனோ அதன் விளைவாக ஏழை நாடுகளின் ஏழை பொது மக்கள் மிகவும் அதிகமாகத் துன்பத்திலும்

துக்கங்களிலும் மூழ்கியிருக்கிறார்கள். அவர்களை நலம் விசாரிப்பதற்கு யாருமில்லை. உயர்மட்ட மக்கள் தமது அரசியல் ஆர்வங்களில் மூழ்கி இருக்கிறார்கள். தம் செல்வாக்கைக் கொண்டு பயன்பெறக் கூடியவர்கள், ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது கொண்ட வேறுபாட்டின் காரணமாக சிறந்த சூழ்ச்சியை சிந்திப்பது, மேலோங்கக் கூடிய சூழ்ச்சியை மேற்கொள்வது ஆகியவற்றில் மூழ்கியுள்ளனர்.

நமது நாட்டில் உள்ள ஏழை பொதுமக்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள்? அவர்களின் வயிறு இரண்டு வேளை உணவினால் நிரம்புகிறதா இல்லையா? அல்லது ஒரு வேளை உணவாவது ஒருவருக்கு கண்ணியத்துடன் கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி யாருக்கும் கவலை இல்லை. யாருக்கும் உணர்வு இல்லை.

ஒருபக்கம் ஏழை பொதுமக்கள் நாளுக்கு நாள் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய முகங்களைப் பார்க்கும்போது அவர்களின் இரத்தம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டிருப்பது தெரிகிறது. மறுபக்கம் இன்னோர் அமைப்பு தொடர்கிறது. முன்னரே அதிகமாக இரத்தம் வைத்திருந்த அவர்களின் பக்கம் ஏழைகளின் இரத்தம் திருப்பி விடப்படுகிறது. எனவே ஏழை சமுதாயங்கள் தமது பயன்களைப் பாதுகாக்கவில்லை என்றால், தமது ஏழை பொதுமக்களின் இரத்தத்தை ஆற்றல் படைத்த,

பணக்கார சமுதாயங்களின் பக்கம் திருப்பும் இந்தத் தொடரைத் தொடர விட்டால் ஒரு காலம் வரும், பிறகு அதிலிருந்து திரும்புவது சாத்தியம் இருக்காது. ரஷ்யாவின் நாசத்தின் மூலமாக எந்த அழிவுகளிலிருந்து நாம் வெளிப்படையான முறையில் ஈடேற்றத்தைப் பெற்றோமோ, இந்த உலகம் இதை விட அதிகமான அழிவுகளில் நுழைக்கப்படும். அது ஒரு வெளிப்படையான ஈடேற்றமாகும்; அதைத் தவிர அதற்கு எந்த மதிப்புமில்லை. உண்மை என்னவெனில், கடைசி நிலை இந்த எல்லா அழிவுக்கும் காரணம் இறைவனிடமிருந்து விலகி இருப்பதன் விளைவே ஆகும். எனவே இது முழுக்க முழுக்க மார்க்கக் கண்ணோட்டத்தில் உலக நிலையைப் பற்றிய சிந்தனையின் ஒரு வெளிப்பாடாகும் என்பதை நான் உங்களுக்கு இந்தக் கோணத்தில் புரிய வைக்க விரும்புகிறேன்.

நான் இந்தியா வந்ததிலிருந்து சுற்றிப் பார்த்து நான் கண்ட நிலையில் எனக்கு ஏழ்மை (யின் து)க்(கத்திற்)கு எந்த ஒரு மதமும் இருப்பதாகத் தெரியவில்லை.

சீக்கியர்கள் துக்கம் அடைந்திருந்தாலும், இந்துக்கள் துக்கம் அடைந்திருந்தாலும், முஸ்லிம்கள் துக்கம் அடைந்திருந்தாலும் எல்லா துக்கத்திற்கும் ஒரே மதம்தான். அவ்வாறே பாகிஸ்தானிலும் (நான் அங்கு இருந்த காலத்தில்) நான் நடந்து திரிந்து பார்த்தபோது அஹ்மதியின் துக்கமாக இருந்தாலும், அஹ்மதி அல்லாதவரின்

துக்கமாக இருந்தாலும், கிறித்தவர்களின் துக்கமாக இருந்தாலும், இந்துக்களின் துக்கமாக இருந்தாலும் ஒரே விதமான துக்கமாகவே இருந்தது. நான் ஒரே விதமாகவே உணர்ந்தேன். இவ்வாறே மற்ற நாடுகளின் நிலையுமாகும்.

ஏழைகள் மற்றும் பலவீனமானவர்களின் துக்கத்தை நாம் உணரும் தகுதியை நம்மிடம் உருவாக்காத வரை நாம் இறைவனுக்கு அருகில் செல்ல முடியாது. எவர்கள் இறைவனுக்கு அருகில் இருக்கிறார்களோ அவர்கள் எல்லா மனித குலத்தையும் பரஸ்பரம் நெருக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வதைத் தமது வாழ்வின் இலக்காகக் கொள்ள வேண்டும். மனிதத்துவத்தின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளை மட்டுமாவது அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். உயர்ந்த முன்னேற்றத்திற்கான முறை பிறகு வரும்.

இது தொடர்பாக மார்க்கங்களும் பல விஷயங்களை செய்ய வேண்டியதிருக்கிறது. பல்வேறு மார்க்கங்களின் தலைவர்களும் இது தொடர்பாக மிகவும் பெரிய பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். ஆனால் மூன்றாம் தர நாடுகளின் பொதுமக்களை நாம் எப்படி ஒன்று சேர்க்க முடியும்? அதற்கு என்ன வழிமுறை? மூன்றாம் தர உலகின் அரசியல்வாதிகளுக்கு, உங்களுடைய பொதுமக்கள் சகோதரர்களைப் போன்று அன்புடன் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்தவாறு வாழ்வைக் கழிக்க

வேண்டும் என்பதையும், கிழக்கத்திய உலகில் எல்லா அண்டை நாடுகளுக்குள்ளும் மிகச் சிறந்த தொடர்புகள் இருக்க வேண்டும் என்பதையும், உங்களுடைய உயர்ந்த, மேலான, இறுதியான பயன்கள் இவற்றையே சார்ந்துள்ளன என்பதையும் எவ்வாறு தெரியப்படுத்துவது? அப்படி இல்லாவிட்டால் உலகில் இப்போது உருவாகிக் கொண்டிருக்கின்ற புதிய வரைபடத்தில் உங்களுடைய இடம் முன்னரை விட குறைவாகவும் அதிகம் தாழ்ந்ததாகவும் ஆகி விடும்.

ரஷ்யாவின் புரட்சியை உலகம் எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் ஓர் உண்மை இதிலிருந்து கண்டிப்பாக வெளிப்பட்டிருக்கிறது. ரஷ்யாவின் அமைப்பு ஒன்றுமற்றதாக இருந்தாலும் அல்லது தர்க்க ரீதியாக அது தவறு என நிரூபிக்கப்பட்டாலும் அதனால் உலகிற்கு ஒரு பயன் கண்டிப்பாக இருந்தது. அது ஏழை சமுதாயங்களுக்கு ஓர் ஆதரவின் வடிவில் இருந்தது. எந்த வலுவான சமுதாயங்களின் பயன்கள் பலவீனமான, ஏழையான சமுதாயங்களுடன் மோதி வந்தனவோ அவற்றிற்கு ரஷ்யாவைப் பற்றிய அச்சமும் பயமும் இருந்ததனாலேயே சில வேளைகளில் அந்த ஏழை சமுதாயங்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு தைரியம் வராதிருந்தது. ரஷ்யா ஏழை நாடுகளுக்கு ஆதரவளித்து வந்ததன் காரணத்தால் மட்டும் அந்த நாடுகள் தப்பித்து

வந்தன. அப்படி கடந்த எழுபது ஆண்டு கால வரலாற்றில் பலமுறை நடந்துள்ளது. இந்த ரஷ்யாவுடைய ஆதரவின் சிந்தனையினால்தான் ஈராக் தவறிழைத்தது. அது உங்களுக்கு முன்னால் இருக்கிறது. பாருங்கள்! இந்த புதிய புரட்சி ஈராக்கை எவ்வாறு நாசமாக்கி விட்டது! அது உண்மையில் இருந்ததா? தவற்றில் இருந்ததா? ஓரளவுக்கு உண்மையில் இருந்ததா? அல்லது முற்றிலும் உண்மையில் இருந்ததா? என்பது விவாதமல்ல. இவ்வாறு உலகின் வரலாறு உருவாகிக் கொண்டிருந்தது. இவ்வாறு இது செயல்பட்டுக் கொண்டிருந்தது. இப்போது இதில் இன்ன மாற்றங்கள் உருவாகி விட்டன என்பது விவாதமாகும்.

ஐரோப்பாவில் ஏழைகளுக்கு அனுதாபம் காட்டும் தூண்டுதல்கள் உருவானதிலும் ரஷ்யாவின் தூரமான ஒரு தாக்கம் செயல்பட்டு வந்தது. இவர்களில் பழமைவாத கட்சிகளைச் சேர்ந்தவர்கள், ரஷ்யாவின் கம்யூனிசக் கொள்கை மக்களிடம் நுழைந்து விடக் கூடாது என்ற அச்சத்தினால் அவர்களுக்குரிய உரிமைகளை முன்னரை விட அதிகமாக கொடுக்க ஆரம்பித்து விட்டனர். எனவே ரஷ்ய புரட்சியின் இந்த தாக்கங்கள் தொலை தூரமானவையும் ஆழமானவையுமாக இருந்தன. மேலும் அதன் வெற்றிடத்தை உடனே உங்களால் உணர முடியாது. எத்தகைய மாற்றங்கள் உருவாகும் என்றால் அவற்றிக்குப் பிறகு பலவீனமான

மக்கள் முன்னரை விட அதிகமாக தம்மை நிராயுதபாணிகளாகக் கருதுவர். இந்த சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? ஒரு மார்க்க வழிகாட்டி என்ற முறையில் நான் உங்களுக்கு என்ன அறிவுரை வழங்க முடியும்? இந்த கருத்துக்களைத்தான் நான் இன்னும் கொஞ்சம் அதிகமாக விளக்கிக் கூற விரும்புகிறேன்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் இந்த புரட்சிகளைப் பற்றி விளக்கமாக செய்தி அறிவித்திருந்தான். அது ஒரு நீண்ட விஷயாகும். அதை நான் இங்கு மீண்டும் குறிப்பிடப் போவதில்லை. ஆனால், அவர்களே இந்தியாவுக்கு இந்தக் கஷ்டங்களுக்கான தீர்வையும் குறிப்பிட்டிருந்தார்கள். இந்தியாவில் வசிப்பவர்களுக்குத் தமது மரணத்திற்கு முன்னர் அவர்கள் இறுதியாக ஒரு போதனை வழங்கினார்கள். அந்த நூலை அவர்கள் இந்திய மக்களுக்கு மிகவும் வேதனையுடன் அறிவுரை வழங்கியவாறு எழுதினார்கள். அதன் பெயர் ‘சமாதானத் தூது’ என்பதாகும். அதன் சில மேற்கோள்களை உங்கள் முன் வைக்கின்றேன். பிறகு இந்தக் கருத்தை அடுத்து விளக்குவேன். இனி வரக் கூடிய கருத்துடன் இதற்கு என்ன

தொடர்பு என்பது அப்போது உங்களுக்கு புரிந்து விடும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைகாமே ஸுல்ஹ் (சமாதானத் தூது) என்ற பெயரைக் கொண்ட இந்த சிறு நூலில் (இது மரண நோய் அவர்களை நம்மை விட்டுப் பிரித்து விட்ட அந்த இறுதி நாட்களில் அவர்கள் எழுதினார்கள். இந்த நூல் அச்சிடுவதற்கு முன் இறைவன் அவர்களைத் திரும்ப அழைத்துக் கொண்டான். மேலும் இந்த நூல் அவர்களின் மரணத்திற்குப் பிறகு வெளியிடப்பட்டது) அவர்கள் கூறுகிறார்கள்:

''நமது நாட்டின் சகோதரர்களே! **சமாதானத் தூது** என்ற இந்த சிறு நூல் மரியாதையுடன் உங்கள் அனைவர் முன்னிலையிலும் எடுத்து வைக்கப்படுகிறது. ஆற்றல் மிக்க அந்த இறைவன் உங்கள் உள்ளங்களில், தானே இல்ஹாமை இறக்குவானாக. நீங்கள் இந்த நட்புறவிலான அன்பளிப்பை ஏதோ குறிப்பிட்ட நோக்கத்தின் அடிப்படையிலும் சுயநலத்தின் அடிப்படையிலும் உள்ளதாகக் கொள்ளாதிருப்பதற்காக நமது அனுதாபத்தின் இரகசியத்தை உங்களுடைய உள்ளங்களுக்கு திறந்து கொடுப்பானாக.''

(நான் என் உள் நோக்கத்திற்காக ஏதோ ஒரு விஷயத்தை கூறுகிறேன் எனக் கருதாதீர்கள். உங்களுடைய நன்மை மற்றும் உங்களுடைய

அன்பு பற்றிய கலப்பற்ற உணர்வினால் கட்டாயத்திற்குள்ளாகி இதை நான் உங்களுக்கு எழுதுகிறேன்)

''அன்பிற்குரியவர்களே! பெரும்பாலும் மறுமை விவகாரம் பொது மக்களுக்கு மறைமுகமாக இருக்கிறது. மரணிப்பதற்கு முன் மரணிப்பவர்களுக்கே மறுமை உலகின் இரகசியம் திறக்கிறது. ஆனால் ஒவ்வொரு தொலை நோக்குப் பார்வை கொண்ட அறிவும் உலகின் நன்மையையும் தீமையையும் அடையாளம் கண்டு கொள்ள முடியும். எவ்விதத்திலும் விலக முடியாத துன்பங்களும், எந்தத் திட்டத்தினாலும் தீர்வு காண முடியாத பிரச்சனைகளும் ஒற்றுமையினால் தீர்வடைந்து விடுகின்றன (அதாவது ஒருவருக்கொருவர் அன்புடனும் நேசத்துடனும் இருப்பதன் மூலமாக தீர்வடைந்து விடுகின்றன) என்பது எவருக்கும் மறைமுகமானதல்ல.

எனவே ஒற்றுமையின் அருள்களிலிருந்து தன்னைத்தானே விலக்கி வைப்பது ஓர் அறிவுள்ளவர் செய்யக் கூடாத ஒன்றாகும். இந்த நாட்டில் இந்துக்களும் முஸ்லிம்களும் எத்தகைய இரு சமுதாயங்கள் என்றால், ஏதாவது ஒரு நேரத்தில் இந்துக்கள் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களை இந்த நாட்டில் இருந்து வெளியேற்றுவதும் அல்லது முஸ்லிம்கள் ஒன்று

சேர்ந்து இந்துக்களை நாட்டில் இருந்து வெளியேற்றுவதும் சாத்தியமற்ற சிந்தனையாகும்.

இன்னும் கூறுவதாயின், இப்போது இந்து முஸ்லிம் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்படுகின்றனர். ஒருவர் மீது அழிவு ஏற்பட்டால் மற்றவரும் அதில் இணைந்து விடுவர். ஒரு சமுதாயம் மற்ற சமுதாயத்தை தனது சுயநலத்தைக் கொண்ட ஆணவம் மற்றும் அகம்பாவத்தினால் ஏளனப்படுத்த விரும்பினால், அதுவும் ஏளனத்தின் கறையிலிருந்து தப்பிக்க முடியாது. அவர்களில் யாராவது ஒருவர் தனது அண்டை அயலாருக்கு அனுதாபம் காட்டாமல் இருந்தால் அதன் நஷ்டத்தை தானும் அடைவார். உங்கள் இரு சமுதாயங்களிலிருந்தும் எவர் மற்ற சமுதாயத்தை அழிக்க நினைக்கின்றாரோ அவருடைய உதாரணம், ஒரு கிளையின் மீது அமர்ந்து கொண்டு அதையே வெட்டுபவரைப் போன்றதாகும்.

நீங்கள் இறையருளால் கல்வியறிவு படைத்தவர்களாகவும் ஆகிவிட்டீர்கள். இப்போது வெறுப்பை விட்டு விட்டு அன்பில் முன்னேற்றம் காண்பது அழகானதாகும். கருணை காட்டாத நிலையை விட்டு விட்டு அனுதாபத்தைக் காட்டுவது உங்களின் அறிவுடைமைக்கு பொருத்தமானதாகும். உலகின் கஷ்டங்கள், முற்றிலும் சூடான மற்றும் சூரிய வெப்பத்தின் நேரத்தில் பாலைவனத்தில் மேற்கொள்ளும் ஒரு பயணமாகும். எனவே இந்தக் கடினமான

பாதைக்கு, எரிகின்ற நெருப்பைத் தணிக்கின்ற, தாகத்தின் நேரத்தில் மரணத்திலிருந்து காப்பாற்றுகின்ற, பரஸ்பர ஒற்றுமை என்னும் குளிர்ந்த தண்ணீர் தேவைப்படுகிறது.

இருவருக்கும் சமாதானத்திற்கு அதிக தேவை இருக்கிற இப்படிப்பட்ட இக்கட்டான ஒரு காலகட்டத்தில் இந்த நூலாசிரியனாகிய நான் உங்களை சமாதானத்தின் பக்கம் அழைக்கிறேன்.

உலகில் பலவிதமான சோதனைகள் இறங்கிக் கொண்டிருக்கின்றன. பூகம்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பிளேக் நோயும் இன்னும் விட்டு விடவில்லை. உலகம் தனது தீய செயலிலிருந்து விலகவில்லை என்றால், தீய வேலைகளிலிருந்து பாவமன்னிப்பு தேடவில்லை என்றால் உலகில் மிகக் கடுமையான துன்பங்கள் வரும் என்றே இறைவன் எனக்குத் தெரிவித்துள்ளான்.''(பைகாமே ஸுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 443,444)

இந்த அறிவுரையை வழங்கி (இன்று அதாவது 1991-ல்) முழுவதுமாக 100 ஆண்டுகள் முடிந்து விட்டன. இது அவர்களின் கடைசி அறிவுரையாக இருந்தது. இந்த அறிவுரையை மனிதன் காது கொடுத்துக் கேட்கவில்லை என்ற துக்கமான உள்ளத்துடன் இந்த அறிவுரையையே இன்று நான் திரும்ப எடுத்துரைத்து உங்களுக்கு முன்னால் வைக்கிறேன். இந்தியா இன்றும்

அவ்வாறே பிரிவினைக்கு இரையாகி இருக்கிறது. அவ்வாறே ஒருவருக்கொருவர் குறைந்த நம்பிக்கைக்கு இரையாகி இருக்கின்றனர். இதற்கு முன்பு உணர்ந்தது போன்றே ஒருவரைப் பற்றி மற்றவர் அபாயத்தை உணர்கின்றார். இன்னும் கூறுவதென்றால், பல நிலைமைகளில் மேலும் அதிகமாக கவலைக்குரிய நிலைமைகள் வெளிப்பட்டிருக்கலாம்.

எனவே, 100 ஆண்டுகளுக்கு முன்னர் எனது எஜமானர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியான் மேடையின் மூலமாக இந்தியாவுக்கு நல்ல அறிவுரையின் மூலமாக சமாதானம், ஒற்றுமை ஆகியவற்றின் பக்கம் அழைத்தது போன்று **இன்று நான் 100 ஆண்டுகளுக்குப் பிறகு அன்னாரின் மிக எளிய அடியார் என்ற முறையில் உங்கள் அனைவரையும் அதே சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையின் பக்கம் அழைக்கின்றேன்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''இந்துக்களும், ஆரியர்களும் இத்தகைய முழுமையான சமாதானத்திற்கு ஆயத்தம் என்றால், அதாவது, அவர்கள் நமது நபி (ஸல்) அவர்களை இறைவனின் உண்மையான நபி என ஒப்புக் கொண்டால், அவமதிப்பதையும் பொய்ப்படுத்துவதையும் இனி விட்டு விட்டால், அஹ்மதிகளாகிய நாங்கள் எப்பொழுதும்

வேதத்தை உண்மைப்படுத்துவோம். மேலும், வேதம் மற்றும் அதன் ரிஷிமார்களின் பெயர்களை கண்ணியத்துடனும் அன்புடனும் எடுத்துரைப்போம் என்ற உடன்படிக்கையில் நான் முதலாவதாக கையொப்பமிடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்.'' **(பைகாமே ஸுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 443,444)**

இந்த விஷயத்தை விளக்கமாக நான் உங்களுக்குப் புரிய வைக்க விரும்புகிறேன். உலகில் அமைதியை பரப்புவதற்கான முக்கியமான பங்களிப்பை மார்க்கம் நிறைவேற்ற வேண்டும். ஆனால், அமைதியின்மையை பரப்புவதற்காக அதிகமான முறையில் மார்க்கம் பயன்படுத்தப்படுகிறது என்பது மிகவும் பேறிழந்த நிலையாகும்.

ஒரே இறைவனின் அடியார்கள், ஒரே இறைவனை வழிபடுபவர்கள், ஒருவர் மற்றவரின் இறைவணக்கம் செய்யும் முறை வித்தியாசமாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அல்லது அவரது மார்க்கத்தின் போதனையின் விபரத்தில் வேறுபாடு இருக்கிறது என்பதற்காக அது அல்லாஹ் என்ற பெயரில் இருப்பதால், இறைவன் என்ற பெயரில் இருப்பதால், வாஹே குரு என்ற பெயரில் இருப்பதால் பரமேசுவரர் என்ற பெயரில் இருப்பதால் ஒருவர் மற்றவரை கொலை செய்ய போதிப்பது, ஒருவர் மற்றவரின் இரத்தத்தைக் குடிப்பதற்கு போதிப்பது

வினோதமான விஷயமாகும்! இது என்ன மார்க்கம்? இந்த மாதிரியான போதனை வழங்குபவன் என்ன இறைவன்!

எனவே மார்க்கங்கள் உலகில் புதியதொரு புரட்சியை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. எல்லா மார்க்கத் தலைவர்களுக்கும், குறிப்பாக, இந்தியாவில் ஏதாவது வகையில் செல்வாக்கு உள்ளவர்களிடம், இது உங்களின் கையில் இருக்கிறது என்று அறிவுரையின் மூலமாக கூற வேண்டிய தேவை இருக்கிறது. நீங்கள் விரும்பினால், உங்கள் சமுதாயத்தின் தலைவிதியை (நன்றாக) உருவாக்குங்கள். நீங்கள் விரும்பினால், உங்கள் சமுதாயத்தின் தலைவிதியை சீர்குலைத்து விடுங்கள். ஆனால் நீங்கள் சமுதாயத்தின் தலைவிதியை சீர்குலைத்து விட்டால் அடியார்களை அடியார்களை விட்டு மட்டும் துண்டிக்க மாட்டீர்கள்; மாறாக, அடியார்களை இறைவனை விட்டும் துண்டித்து விடுவீர்கள். நீங்களும் இறைவனிடமிருந்தும், இறை அடியார்களிடமிருந்தும் நிரந்தரமாக உங்கள் உறவை துண்டித்துக் கொள்வீர்கள். இந்த அறப்போரின் பக்கம் நான் உங்களை அழைக்கின்றேன்.

இது தொடர்பாக மேற்கொண்டு நான் உங்களுக்குக் கூறுவதென்னவென்றால், மனிதன் இன்னொரு மனிதனிடம் அன்பை உருவாக்க வேண்டும் என்பதே எல்லா மார்க்கத்தின் போதனையாக இருக்கிறது. மேலும் இறைவன்

மற்றும் மனிதனுக்கு இடையில் அன்பை உருவாக்க வேண்டும்.

**எனவே, மார்க்கத் தலைவர்கள் இறைவனின் பெயரால் எவருக்காவது வெறுப்பை போதிக்கின்றார்கள் என்றால், அவர்கள் இரண்டு விளைவுகளில் ஒன்றை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். ஒன்று, அந்த மார்க்கம் பொய்யானது; அல்லது அந்த மார்க்கத் தலைவர் பொய்யராவார். ஒரே நேரத்தில் இரண்டும் உண்மையாக இருக்க முடியாது.** ஆனால் நான் உங்களுக்கு கூறுகிறேன். நான் முஸ்லிமாக இருக்கின்றேன். முஸ்லிம் என்ற வகையிலேயே நான் இந்த இரகசியத்தைப் பெற்றேன். அதாவது, உலகின் எல்லா மார்க்கங்களும் தனது துவக்கத்தில் உண்மையாக இருந்தன. பொய் என்று குறிப்பிடக் கூடிய எந்த ஒரு மார்க்கமும் இருந்ததில்லை. பிறகு பொய்யர்கள் அவற்றை மாற்றி விட்டனர். எப்படி அவர்கள் மாற்றுகின்றனர் என்பது உங்களுக்கு முன்னால் இருக்கிறது. சூரியனின் பெயரில் இருளைப் பரப்புவதற்கு முயற்சி செய்யப்பட்டால், எல்லாரையும் விட அதிகமாக அன்பு செலுத்தும் இறைவனின் பெயரில் வெறுப்புகளை போதிக்கும் போது அதனால் மார்க்கங்கள் சீர்குலைந்து போகின்றன.

இவ்வாறு, மனிதர்களுக்கிடையிலான இடைவெளி அதிகமாகின்றது. இவ்வாறு இடைவெளிகள் உருவாகின்றன. ஆனால் நீங்கள்

நினைவில் கொள்ளுங்கள்! தொலைவுகள் ஒருவருக்கொருவருடன் மட்டும் அல்ல; மாறாக, இறைவனுடனும் ஆகிக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் பிறரை வெறுக்கின்ற அடியார்களை இறைவன் ஒருபோதும் நேசிப்பதில்லை. ஒருபோதும் அவர்களுடன் அன்பு செலுத்த மாட்டான். எனவே அரசியல் தலைவர்களால் பரப்பப்படும் துன்பங்கள் மனிதன் என்ற வட்டத்தில் மட்டுமே - இந்த உலகின் வட்டத்தில் மட்டுமே அழிவைப் பரப்புகின்றன. ஆனால் மார்க்கத் தலைவர்கள் துன்பங்களைப் பரப்ப ஆரம்பித்து விட்டால் மார்க்கமும் கையை விட்டுப் போய்விடுகிறது; உலகமும் கையை விட்டுப் போய்விடுகிறது. இரண்டு இடங்களிலும் அழிவுதான்.

நான் மார்க்கங்களை ஆராய்ந்தவரை எல்லா இடங்களிலும் துவக்கத்தில் மிகத்தூய அன்பு, நேசம், ஒற்றுமை ஆகியவற்றின் போதனையையே கண்டேன். இது தொடர்பாக நான் உங்களுக்கு முன்னால் சீக்கியர்கள், இந்துக்களின் தூய வேதங்களின் சில மேற்கோள்களை எடுத்து வைக்கின்றேன். உண்மையில் எல்லா மார்க்கத்தின் துவக்கம் ஓரிறை கொள்கையினால் உருவானது என அதிலிருந்து உங்களுக்குத் தெரிய வரும். ஆரம்பத்தில் இருந்த ஒவ்வொரு மார்க்கத்தின் உண்மையான வழிகாட்டிகள் ஒரே இறைவனை வணங்க வேண்டும் என்றே போதித்து வந்தனர்.

இறைவன் ஒருவனாக இல்லை என்றால் பிறகு மனிதனும் ஒருபோதும் ஒற்றுமையாக முடியாது என்பதற்காக இது அவசியமாகவும் இருந்தது. தாய் வேறு வேறு என்றால், வீடுகளில் குழப்பம் உருவாகி விடுகிறது. தந்தை வேறு வேறு என்றால், உறவுகள் முறிந்து விடுகின்றன. குடும்பங்களின் வேற்றுமையுடன் வெறுப்புகளும் அதிகமாகி விடுகின்றன. சகோதரத்துவத்தின் வேற்றுமையுடன் விரிசல்கள் அதிகமாகி விடுகின்றன. இவையெல்லாம் இந்த உலகில் உருவானால் பிறகு நமது படைப்பாளன், எஜமானன் நம்மை காத்தோம்புபவன் பலராக எப்படி இருக்க முடியும்? நாம் இப்பொழுது ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துபவர்களாக மாற முடியும் என்ற அறிவீனமான கற்பனையில் நாம் எப்படி மூழ்கியிருக்க முடியும்? இதன் காரணமாகத்தான் எல்லா மார்க்கங்களும் ஆரம்பத்திலிருந்தே ஓரிறை கொள்கையை போதித்திருக்கின்றன.

பஞ்சாபில் அதிமான எண்ணிக்கையில் சீக்கியர்களும் இந்துக்களும் இருக்கின்றனர். நான் அவர்களின் நாட்டில் இருந்து கொண்டே உங்களிடம் உரையாடிக் கொண்டிருக்கின்றேன்.

எனவே உங்களின் சான்றோர்கள், இறைவனை அடைந்தவர்கள் உங்களிடம் என்ன எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நினைவூட்டுவதற்காக நான் இந்துக்கள் மற்றும் சீக்கியர்களின் தூய வேத

நூல்களிலிருந்து மட்டும் சில மேற்கோள்களை எடுத்துள்ளேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்கள்: ''ஓரிறை கொள்கை இல்லாமல் மனிதகுலத்துடன் அனுதாபம் காட்டுவது சாத்தியமில்லாத ஒன்றாகும்.''

இந்த தூதுச் செய்தியைத்தான் உங்களின் மார்க்கங்களின் கூற்றுக்களில் இருந்து நான் உங்களுக்கு எட்ட வைக்க விரும்புகிறேன். சீக்கிய மதம் இன்றிலிருந்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்ரத் பாபா குரு நானக் சாஹிப் அவர்களின் மூலமாகத் தோன்றியது. மேலும் முதல் ஐந்து குருக்களின் போதனைகள் குரு கிரந்து சாஹிப் என்ற பெயரில் நமக்கு முன்னால் இருக்கிறது. அவை மிகவும் அருமையான போதனைகளாகும். அவற்றைப் படித்து ஆன்மா குதூகலமாகிறது. இன்னும் கூறுவதென்றால் மார்க்கங்களின் ஒற்றுமையின் உறுதி நம்பிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

அந்த போதனைகளைப் படிப்பதன் மூலம் அந்த ஓர் இறைவனே எல்லா இடத்திலும் தோற்றமளிக்கின்றான் என்ற நம்பிக்கையில் மனிதன் நூற்றுக்கு நூறு நிலைபெற்று விடுகின்றான். மேலும் எல்லா மார்க்கங்களும் தனது உண்மையான நிலைமைகளில் ஒரே இறைவனின் பக்கம் வழிகாட்டக் கூடியவையாக

இருக்கின்றன. எனக்கு குர்முகி படிக்கும் திறமை இல்லை என்பதில் மிகவும் வருத்தம் இருக்கிறது. மேலும் தங்களுடைய மார்க்க போதனையின் தூய வாசகங்களைத் தவறான முறையில் உங்களுக்கு முன்னால் படித்துக் காட்ட நான் விரும்பவில்லை.

எனவே, நான் மொழியாக்கத்தையே போதுமானதாகக் கொள்ளும்போது என்னை மன்னித்து விடுங்கள். குரு கிரந்து சாஹிப் பக்கம் **188** பூடி ஐந்தாவது மஹல்லாவில் இந்த சொற்றொடர் குறிப்பிடப்பட்டுள்ளது:

''எவர் தனது வாஹே குருவை அதாவது இறைவனை வணங்குவதில்லையோ அவருடைய வாழ்க்கை எந்த பயனுக்கும் ஆகாது. அவர்கள் தாமே மரணிக்கின்றனர்.''

இந்தத் தூய்மையான அறிவுரை திருக்குர்ஆனின் இந்த வசனத்தை எனக்கு நினைவூட்டியது:

اِنَّ الَّذِيْنَ يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِىْ سَيَدْخُلُوْنَ جَهَنَّمَ دٰخِرِيْنَ

**(திருக்குர்ஆன் 40:61)**

அதாவது, 'என்னை வணங்காமல் ஆணவம் கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக இழிவடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள்.'

குரு அர்ஜுன் தேவ்ஜீ சீக்கிய சமுதாயத்துக்கு மட்டுமின்றி மற்ற மக்களுக்கும் மாபெரும் நன்மை செய்திருக்கிறார். அவர் முதல்

ஐந்து குருக்களின் புனித போதனைகளை இந்தத் தூய நூலின் வடிவில் பாதுகாத்து வைத்து விட்டார். இன்னோர் இடத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

''நீங்கள் உங்களைத் தியாகம் செய்த பிறகு இறைவன் கிடைக்கின்றான். இதை விட அறிவுப்பூர்வமான விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?'' (திலங்க் மஹல்லா, முதல் குரு கிரந்து சாஹிப் பக்கம் 722)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதே கருத்தை ஒரு கவிதையில் இவ்வாறு கூறியிருக்கிறார்கள்:

அன்பு கொள்பவர்கள் மரணித்து மரணித்து அன்பாளனை அடைகிறார்கள். (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 17)

சுப்ஹானல்லாஹ்! இது எவ்வளவு சரிசமமான கூற்றாகும்!! இறைவனைச் சார்ந்தவர்களின் சிந்தனைகளும் ஒன்று போலவே இருக்கின்றன; அவர்களின் கூற்றுகளும் ஒன்று போலவே இருக்கின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

''அன்பு கொள்பவர்கள் மரணித்து மரணித்து அன்பாளனை அடைகிறார்கள்.

மரணித்து விட்ட பிறகு அவன் பக்கமே ஈர்க்கப்படுகின்றனர்.

எவர்கள் மரணித்து விட்டார்களோ அவர்களின் நற்பேற்றில்தான் வாழ்வு இருக்கிறது.

பல மரணங்கள் ஏற்படாமல் இந்த வழியில் வாழ்வு கிடைப்பதில்லை.'' (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 17)

மரணிப்பவருக்கே வாழ்வு கிடைக்கிறது. மரணமின்றி இந்த வழியில் வாழ்வு கிடைக்க முடியாது.

அடுத்து குரு கிரந்து சாஹிப் பக்கம் 9 முதல் ஆஸா மஹல்லாவில் இந்தச் சொற்றொடர் இடம்பெற்றிருக்கிறது. அதன் பொருள்:

'எனக்கு உண்மையான இறைவனின் பெயரைப் பற்றிய பசி உருவாகிறது.'

சுப்ஹானல்லாஹ்! எத்தகைய வார்த்தை!!

மனிதன் பசியில் உணவிற்காகத் துடிக்கும்போது எவ்வளவு நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறதோ அதே அளவுக்கு அதன் தேட்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பிறகு உணவினால் மனிதன் பசியைத் தணிக்கும்போது அந்த உணவு வாழ்க்கையின் பகுதியாகி விடுகிறது. அதன் மூலம் சுத்தமான இரத்தம் உருவாகிறது. அதன் மூலம் உடலும் வளர்கிறது. உள்ளத்திற்கும் ஆற்றல் கிடைக்கிறது; மூளைக்கு ஆற்றல் கிடைக்கிறது. எனவே இறைவனை நேசிக்கும் மக்களுக்கு இறைவனைப் பற்றிய நினைவு என்பது பசியுடையவருக்கு நல்ல

உணவைப் போன்று இருக்கிறது. எனவேதான் அவர்கள் கூறுகிறார்கள்: 'உண்மையான இறைவனின் பெயரைப் பற்றிய பசி எனக்கு உருவாகிறது. மேலும் எனது எல்லாத் துன்பங்களும் சோதனைகளும் இறைவனின் பெயரைப் பற்றிய பசியினால் விலகி விடுகின்றன.'

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை ஒத்த ஒரு கருத்தை இவ்வாறு குறிப்பிருக்கிறார்கள்:

'என் எஜமானனே! உனது பார்வைகள் எனக்குக் கூர்மையான வாள்களாக மாறி விடுகின்றன. அவற்றின் மூலமாக பகைவர்களிடமிருந்து என் மீது வீசப்படும் துன்பங்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு முடிவுக்கு வந்து விடுகின்றன. அதாவது, மற்றவர்களிடமிருந்து முற்றிலும் தனியாகவும் பொருட்படுத்தாதவனாகவும் நான் ஆகி விடுகின்றேன். மேலும், உனது அன்பின் காரணமாகவே எனக்கு அமைதியின் வாழ்வு கிடைக்கிறது.' (சுர்மா சஷ்மயே ஆர்யா. ரூஹானீ கஸாயின், தொகுதி 2 பக்கம் 52)

'உங்களிடம் இருக்கும் அகம்பாவத்தை விட்டு விடுங்கள். பிறகு, இறைவனை நினைவு கூருங்கள். அப்போது இறைவனின் அன்பிற்கு உரியவர்கள் ஆகிவிடுவீர்கள்.' (ஆஸா மஹல்லா, ஐந்தாவது குருகிரந்து பக்கம் 377-378)

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் கூறுகிறார்கள்:

'எவர் மண்ணுடன் கலந்து விடுகின்றாரோ அவருக்கு இறைவனைப் பற்றிய ஞானம் கிடைக்கிறது. சோதித்துப் பார்ப்பவர்களே! இந்த குறிப்பையும் சோதித்துப் பாருங்கள்.

ஆணவத்தையும் அகம்பாவத்தையும் விட்டு விடுங்கள். இதிலேயே இறையச்சம் இருக்கிறது. மண்ணாகி விடுங்கள். எஜமானனின் விருப்பம் இதிலேயே இருக்கிறது.' (பாராஹீனே அஹ்மதிய்யா ஐந்தாம் பாகம். ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 17)

இப்போது கூறுங்கள்! பெயரினால் என்ன வித்தியாசம் ஏற்பட்டு விடப் போகிறது? உள்ளங்களின் அன்பு அல்லாஹ்வின் பக்கம் ஒரே மாதிரியாக ஓடிக்கொண்டு இருக்கிறதென்றால், மனிதகுலத்திற்கு இறைவனின் பக்கம் வருமாறு ஒரேமாதிரியான உண்மையான போதனை வழங்கப்படுகிறதென்றால் இதுதானே குறிக்கோள்! பெயர் மாறுவதால் என்ன வித்தியாசம் வந்து விடப்போகிறது?

ஹஸ்ரத் கபீர் பகத் சாஹிப் அவர்களும், சீக்கிய உலகில் மிகவும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் பார்க்கப்படுகிறார்கள். குரு கிரந்து சாஹிபில் அவர்களுடைய சான்றுகளும் கிடைக்கின்றன. ஓரிடத்தில் எழுதப்பட்டுள்ளது:

‘முதலாமவன் இறைவனே ஆவான். எல்லா அடியார்களும் அவனுடைய ஒளியின் ஆற்றலின் அடியார்களாவர். ஓர் ஒளியினாலேயே முழு உலகமும் உருவானது. எனவே ஒருவரை நல்லவர் என்றும், ஒருவரைக் கெட்டவர் என்றும் கூறுவது தவறாகும். அனைவரையும் நேசிப்பது இறைவனை நேசிப்பது ஆகும்.’ (குருகிரந்து சாஹிப் பக்கம் 1349 பர்பாதி ராஃக்)

இதே கருத்து பல்வேறு கோணங்களில், திருக்குர்ஆனின் அதிகமான வசனங்களில் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக,

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ (24:36)

‘அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் ஒளியாக இருக்கின்றான்.’

பாருங்கள்! அல்லாஹ்தான் மனித குலத்திற்கு மட்டுமல்ல. மாறாக, வானங்கள் மற்றும் பூமியின் ஒளியாக இருக்கின்றான். எல்லா இடத்திலும் அந்த ஒளியே கிடைக்கின்றது. எனவே உண்மையில், ஏகத்துவத்திலேயே அன்பு பற்றிய முழுமையான போதனை காணப்படுகிறது. எவருக்கு ஓரிறைவனுடன் தொடர்பு நிலைபெற்று விடுகிறதோ, இறைவனின் ஓரிறைமை புரிந்து விடுகிறதோ அவர் ஒருவருக்கொருவர் வெறுப்பு கொள்வதன் சிந்தனையைக் கூட உள்ளத்தில் ஒருபோதும் கொண்டு வர முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தக் கருத்தை இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

'இறைவன் வானம், பூமி ஆகியவற்றின் ஒளி ஆவான். அதாவது, உயரத்தில் அல்லது கீழே தென்படும் ஒவ்வோர் ஒளியும், அது, ஆன்மாக்களிலிருந்தாலும், உடல்களிலிருந்தாலும், சொந்தமாகயிருந்தாலும், சார்ந்ததாகயிருந்தாலும், வெளிப்படையாக இருந்தாலும், மறைமுகமாக இருந்தாலும், சிந்தனையில் இருந்தாலும், சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும், அது அவனுடைய அருளின் அன்பளிப்பே ஆகும். அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிக்கின்ற இறைவனின் பொதுவான அருள் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது; அவனுடைய அருளிலிருந்து எதுவும் வெற்றிடமாக இல்லை என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.' (பாராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின், பக்கம் **181** அடிக்குறிப்பு)

இந்த வெயிலைப் பாருங்கள்! முழு உலகிலும் ஒரே மாதிரியாக பிரகாசிக்கிறது. ஒரே மாதிரியான அருளை இந்த மழை எல்லா இடத்திலும் பொழிகின்றது. இந்த ஒரே காற்றினால் இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள், பௌத்தர்கள் ஆகிய அனைவரும் வாழ்வின் ஆற்றலைப் பெறுகின்றனர். ஆக, ஓரிறைவன் எவ்வாறு ஓர் அருளை எல்லாருக்கும்

பொதுவானதாக ஆக்கி வைத்துள்ளான்! நாம் ஒருவர் மற்றவருக்கிடையில் வெறுப்பை போதிப்போம் என்றால், நாம் எப்படி அந்த இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த முடியும்?

ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இது தொடர்பாக மிகவும் அன்பான, ஆழமான ஞானமிக்க விஷயத்தை நமக்கு முன்னால் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கூறினார்கள்:

‘குழந்தை வளரும் தாயின் கருப்பைக்கு அரபியில் **ரிஹ்ம்** என்று கூறப்படுகிறது. ரிஹ்ம் என்ற மூலச் சொல்லிலிருந்தே இறைவனின் ரஹ்மான் (கருணைமிக்கவன்) என்ற பெயர் தோன்றியது. எவர் உறவுகளின் தொடர்பை முறித்துக் கொள்கிறாரோ, உலகின் உறவுகளை முறித்துக் கொள்கிறாரோ, அவர் ரஹ்மானாகிய இறைவனிடமிருந்தும் தனது தொடர்பை முறித்துக் கொள்கிறார்.’ (திர்மிதீ. கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா, பாபு மாஜாஅ ஃபீ சில(த்)திர் ரஹிம்)

எனவே இந்த போதனை உங்களுக்கு உலகின் எல்லா மார்க்கங்களிலும் காணக் கிடைக்கும். எனவேதான் திருக்குர்ஆன்,

فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ (98:4)

என்று வாதம் செய்திருக்கின்றது. அதாவது இந்த வேதம் உலக போதனைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட போதனையை தருவதற்காக வரவில்லை; மாறாக, இதில்

உலகின் எல்லா நிலைபெற்றிருக்கக்கூடிய, உயிருள்ள போதனைகளின் முன்மாதிரியை நீங்கள் காண்பீர்கள்.

குரு கிரந்து சாஹிப் சுலோகம் வாரா(ன்). முதல் மஹல்லா பக்கம் 1412-ல் அந்த அன்பான கவிதைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் பொருள்:

'இறைவனை நேசிக்க விரும்பினால் இந்தக் களத்தில் உங்கள் தலையை உள்ளங்கையில் வைத்து கொண்டு வாருங்கள். இந்த வழியில் நீங்கள் செல்ல வேண்டுமென்றால் பிறகு உங்கள் தலையை கொடுப்பதை விட்டும் விலகாதீர்கள்.'

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'உனது வீதிகளில் நான் எந்த வழிகளின் மூலமாக வருவேன்? எந்தத் தொண்டின் மூலமாக உன்னை நான் பெறுவேன்?

இறையன்பின் மூலமாகவே நான் ஈர்க்கப்படுவேன். இறைமையின் மூலமாகவே அகந்தையை நான் எரிக்க முடியும்.'

(துர்ரே ஸமீன் பக்கம் 50 நஸாரத் இஷாஅத் ரப்வா வெளியீடு, ஸியாவுல் இஸ்லாம் அச்சகம் ரப்வா)

அதாவது, நான் எனது அகந்தையை அழிக்காத வரை உன்னை அடையும் வழியைப் பெறவே முடியாது. ஆனால் எனது அகந்தையை

அழிப்பதும் உனது ஆற்றலுக்கு உட்பட்ட விஷயம்தானே! இறைமைதான் அகந்தையை அழிக்க முடியும். அது இல்லாமல் மனிதனின் அகந்தை அழிய முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 'சத் ப(ச்)சன்' என்ற தமது நூலில் சீக்கிய சான்றோர்களின் மேற்கோள்களை அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், சீக்கிய மார்க்கத்தின் போதனையிலும் இஸ்லாமிய மார்க்கத்தின் போதனையிலும் எந்தவொரு வித்தியாசமும் இல்லை; ஒரே ஒளியிலிருந்து வெளிவரும் நீரூற்றுகள் ஆகும். நாம் ஏன் ஒருவர் மற்றவரை எதிர்க்க வேண்டும்? நாம் ஏன் ஒருவர் மற்றவரிடமிருந்து விலகி இருக்க வேண்டும்? என்ற முடிவுக்கே வந்துள்ளார்கள். ஆனால் அவர்கள் இந்த முடிவை சீக்கியர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கிடையில் மட்டும் எடுக்கவில்லை. மாறாக, இந்து மற்றும் இஸ்லாம் மார்க்கம் தொடர்பாகவும் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

**உலகின் எல்லா மார்க்கங்களும் ஒரே இறைவனின் கடலிருந்து வெளியாயின; அந்த ஒரே உண்மையான இறைவனின் ஒளியிலிருந்து அவை ஒளியைப் பெற்றன என்ற அடிப்படையான உறுதிப்பாட்டின் பக்கம் அந்த மார்க்கங்கள் திரும்பாத வரை உலகில் ஒருபோதும் உண்மையான அமைதி நிலைபெற**

**முடியாது என்ற விஷயத்தை அவர்கள் மிகவும் தெளிவாக மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறினார்கள்.**

பல ஆதாரங்கள் இருக்கின்றன; நேரம் இன்மையால் நான் விட்டு விடுகிறேன். ஜப் ஜீ வ சுக் மனி சாஹிப் என்பது இறைவனின் அன்பு அவனைப் பற்றிய குறிப்பு தொடர்பான சீக்கியர்களின் கீதமாகும். இதனை காஜா தில் முஹம்மது சாஹிப் உருது கவிதையில் மொழியாக்கம் செய்துள்ளார்கள். அதிலிருந்து நான் சில கவிதைகளை உங்களுக்கு படித்துக் காட்டுகிறேன்:

'அவர்களுக்கு ஓர் ஏக இறைவன் இருக்கின்றான். அவன் பெயர் உண்மையாளன் என்பதாகும். அச்சமின்றியும் வெறுப்பின்றியும் அவன் உலகின் எல்லா வேலைகளையும் நிரந்தரமாக செய்கின்றான்.

அவன் மரணத்திற்கும் அப்பாற்பட்டவன்; பிறப்பை விட்டும் தூயவன். தானாகவே நிலைபெற்றிருப்பவன்.

உனது இறைவனின் கருணையினால் நீ அவனது பெயரையே நினைவு கூருவாயாக. ஆதிக்கும் முன்னரே அவன் உண்மையாளனாக இருக்கின்றான். அந்தமான நாளிலும் அவன் உண்மையாளன் ஆவான்.

நானக்கே! இன்றும் அ(ந்த இறை)வன் உண்மையானவனாக இருக்கின்றான். நாளையும்

அவன் உண்மையானவனாக இருப்பான்.' (ஜப் ஜீ வ சுக் மனி சாஹிப் பக்கம் 3 காஜா தில் முஹம்மது சாஹிப். வெளியீடு ஆஸாது புக் டிப்போ, ஹால் பஜார், அமிர்தசரஸ்)

இப்போது இந்த போதனையைப் படித்த பிறகு இதைக் கூறுபவரின் மீது கொண்ட அன்பினாலும் உள்ளம் தானாகவே துள்ளிக் குதிக்கிறது; ஏக இறைவனுக்காகவும் அவருடைய உள்ளத்தில் ஓர் எல்லையற்ற அன்பின் உணர்வு கிளர்ந்தெழுகிறது. மேலும், இது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களை நினைவூட்டுகின்ற கவிதையாக உள்ளது. இதே கருத்து அங்கு அரபியில் கூறப்பட்டுள்ளது. எனவே ஒரே கூற்றுதான்; அன்பிற்குரிய ஒரே இறைவனின் பக்கம் இட்டுச் செல்லக் கூடியதுதான். அதன் மொழிகள் வேறுபட்டவையாக இருந்தால் அதனால் என்ன வித்தியாசம் வந்துவிடப் போகிறது? அதற்காக நாம் ஒருவர் மற்றொருவருடன் சண்டையிட வேண்டுமா என்ன? ஒருவர் மற்றவரை வெறுக்க வேண்டுமா என்ன?

மார்க்க வேறுபாடுகள் தமது இடத்தில் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு மார்க்கத்தின் போதனையும் அடிப்படையில், மனிதனை மனிதனுக்கு அருகில் கொண்டு வருவதற்காக வந்தன. **ஒரு மார்க்கம் மனிதனை, மனிதனுக்கு அருகில் கொண்டு வரவில்லை என்றால் அது**

**மனிதனை இறைவனுக்கு அருகிலும் கொண்டு செல்ல முடியாது** என ஒவ்வொரு மார்க்கமும் வாதம் செய்கிறது. இது எத்தகைய உறுதியான உண்மை என்றால் இதில் நீங்கள் ஒருபோதும் எந்த மாற்றத்தையும் காண மாட்டீர்கள். **எந்த மனிதன் இறைவனின் அடியார்களுக்காக ஆக முடியவில்லையோ அவன் இறைவனுக்காகவும் ஆக முடியாது.**

எனவே நீங்கள் மனிதத்துவம் பற்றிய போதனையில் அழுத்தம் கொடுங்கள் என்று நான் உங்களுக்கு இறைவனின் பெயரில் அறிவுரை கூறுகிறேன். ஒவ்வொரு மார்க்கத்தின் கடைசி ஆயுதம் இதுதான். இதன் மூலமாகவே ஷைத்தானியத்தை (தீய சக்தியை) தோல்வியுறச் செய்ய முடியும். மனிதத்தை உயிரூட்டவில்லை என்றால், எந்த மனிதனிடமும் ஷைத்தானியத் (தீய சக்தி) மரணிக்க முடியாது. அது எப்போதும் அவனுடன் இருக்கும். அது எப்போதும் அவனது வாழ்வை நரகமாக்கிக் கொண்டிருக்கும்.

ஜப் ஜீயில் இன்னோரிடத்திலிருந்து காஜா தில் முஹம்மது சாஹிப் செய்த மொழியாக்கம் இதுவாகும்:

'இறைவனின் வல்லமையைப் பற்றி யார் பாடுவது? இது எந்த மனிதனின் சக்திக்கு உட்பட்டது?

இறைவனின் அருளைப் பற்றி யார் பாடுவது?

அவன் அடையாளங்களை எடுத்துக் கூறுவதற்கு யாருக்குத் திறமை இருக்கிறது?

இறைவனின் மகத்துவத்தையும், உயர்ந்த அந்தஸ்தையும், மேன்மையையும் யார் பாடுவது?

இறைவனின் ஞானத்தைப் பற்றி யார் பாடுவது?

அவனுடைய சிந்தனைகள் கடினமானது.

உடலுக்கு அழகை வழங்கி பிறகு மண்ணாக்குகின்ற அந்த இறைவனைப் பற்றி யார் பாடுவது?

படைத்து மரணிக்கச் செய்து பின்பு உயிரூட்டுகின்ற அந்த இறைவனைப் பற்றி யார் பாடுவது?

நமக்கு அருகிலும் நம்மை விட்டு தொலைவிலும் இருக்கின்ற அந்த இறைவனைப் பற்றி யார் பாடுவது?

எப்போதும் நமக்கு அருகில் இருந்து நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்த தூயவனைப் பற்றி யார் பாடுவது?

அவனைப் பற்றிய விஷயங்கள் முடிவுறாது. எல்லா நிலைமைகளையும் எடுத்துக் கூற இயலாது.

கோடிக்கணக்கான மக்கள் அவனது கோடிக்கணக்கான பண்புகளை எடுத்துக் கூறினாலும் அவனது மகத்துவத்தை எடுத்துக் கூறி விட முடியாது.

வள்ளலாகிய அவன் வழங்கிக் கொண்டே இருக்கின்றான். ஆனால் வாங்குபவர்கள் களைப்படைந்து விடுகின்றனர்.

ஒவ்வொரு யுகத்திலும் உண்பவர் அவனது அருளினாலேயே உண்கின்றார்.

அதிபதியாகிய அவன் தனது கட்டளையால் உலகிற்கு வழிகாட்டி இருக்கிறான்.

நானக்கே! (இறைவனை மறந்து) ஆனந்தமாக வாழ்கிறார்களே! எவ்வளவு அலட்சியம்!'

(சப் ஜீ வ சுக் மனி சாஹிப் பக்கம் 7, பூடி எண் 3, ஆஸாது புக் டிப்போ, ஹால் பாஸார் அமிர்தசரஸ் வெளியீடு)

இப்போது நான் உங்களுக்குத் திருக்குர்ஆனின் சில வசனங்களின் சிறு சிறு பகுதிகளை எடுத்துரைக்கிறேன். இதிலிருந்து இந்த போதனை முற்றிலும் சரிசமமாக இருக்கிறது என்பதும், ஒரு போதனை இன்னொரு போதனைக்கு வழிகாட்டுகிறது என்பதும் உங்களுக்கு நினைவுக்கு வரும். எனவேதான் ஹஸ்ரத் பாபா குரு நானக் அவர்கள் திருக்குர்ஆனை மிகவும் நேசித்தார்கள் எனவும் திருக்குர்ஆனை படித்து வந்தார்கள் எனவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் அழுத்தமாகக் கூறிவந்தார்கள். மேலும் இதனால் உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் அன்பு உருவாக

வேண்டுமே தவிர வெறுப்பு அல்ல என்றும் கூறினார்கள்.

ஆனால் மக்கள் மார்க்கத்தைக் குறுகிய கண்ணோட்டத்தில் எடுத்துச் செல்வது வியப்பான விஷயமாகும். பரந்த தைரியங்களுக்குரிய இடங்களுக்கு பதிலாக மார்க்கத்தைக் குறுகிய பார்வையின் பக்கம் ஈர்த்து வருகின்றனர். இதனால் தவறான எண்ணங்கள் உருவாகின்றன. இப்போது கேளுங்கள்! திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

لَيْسَ كَمِثْلِهٖ شَيْءٌ ۚ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ (42:12)

'அவனைப் போன்றது எதுவுமில்லை. அவன் நன்கு கேட்பவனும் பார்ப்பவனுமாவான்.'

قُلْ لَّوْ كَانَ الْبَحْرُ مِدَادًا لِّكَلِمٰتِ رَبِّيْ لَنَفِدَ الْبَحْرُ قَبْلَ اَنْ تَنْفَدَ كَلِمٰتُ رَبِّيْ وَ
لَوْ جِئْنَا بِمِثْلِهٖ مَدَدًا ۝ (18:110)

'நீர் கூறுவீராக: என் இறைவனின் சொற்களுக்(கு அவற்றை எழுதுவதற்)காக கடல் மையாக ஆகி விட்டாலும் என் இறைவனின் சொற்கள் முடிவடைவதற்கு முன்னர் கடல் தீர்ந்து போய்விடும். (அதனை) அதிகப்படுத்துவதற்காக நாம் (மேலும்) அதே அளவு (நீரைக்) கொண்டு வந்தாலும் சரியே.'

இது நான் இதற்கு முன் வேறொரு சொற்களில் உங்களுக்கு எடுத்துக் கூறிய அதே கருத்துதான்.

هُوَ يُحْيٖ وَيُمِيْتُ وَاِلَيْهِ تُرْجَعُوْنَ ۝ **(10:57)**

'அவனே உயிரூட்டுகிறான். அவனே மரணிக்கச் செய்கிறான். பிறகு அவன் பக்கமே நீங்கள் திருப்பி அனுப்பப்படுவீர்கள்.'

وَكُلُوْا مِمَّا رَزَقَكُمُ اللّٰهُ حَلٰلًا طَيِّبًا ۖ وَّاتَّقُوا اللّٰهَ الَّذِيْٓ اَنْتُمْ بِهٖ مُؤْمِنُوْنَ ۝

**(5:89)**

'அல்லாஹ் உங்களுக்கு வழங்கியவற்றில் இருந்து தூய்மையானவற்றையும் ஆகுமானவற்றையும் உண்ணுங்கள். மேலும் நீங்கள் நம்பிக்கை கொண்ட அந்த அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.'

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'நமது இறைவன் அற்புதமான இறைவன் ஆவான். அவனைப் போன்றவன் யார்? அவன் முற்றிலும் ஆற்றல் பெற்றவன் ஆவான்.' (நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 435)

இந்தக் கருத்தை முடிப்பதற்கு முன் - இது தொடர்பாக இந்து மத போதனைகளை முன்மாதிரியாக உங்களுக்கு முன்னால் எடுத்து வைப்பதற்கு முன்னர், இறைவன் மீதான

அன்பையும் அவனுடைய ஏகத்துவத்தையும் வெளிப்படுத்தும் விதமாகவும் உள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன் எடுத்து வைக்கிறேன். அவர்கள் கூறுகிறார்கள்:

'இறைவன் தனது எல்லா மேன்மைகளைப் பொருத்த வரையிலும் தனித்தவனும், இணை இல்லாதவனும் ஆவான். அவனிடம் எந்தக் குறையும் இல்லை. அவன் எல்லா முழுமையான பண்புகளின் தொகுப்பு ஆவான். எல்லா தூய ஆற்றல்களின் தோற்றம் ஆவான். எல்லா படைப்பினங்களின் ஆரம்பம் ஆவான். எல்லா அருள்களின் தலையூற்றாவான். எல்லா நற்கூலி தண்டனையின் எஜமானன் ஆவான். எல்லா விவகாரங்களின் திரும்புமிடம் ஆவான்.

அவன் தூரமாக இருந்தாலும் அருகில் இருக்கின்றான்; அருகில் இருந்தாலும் தூரத்தில் இருக்கின்றான். அவன் எல்லாவற்றையும் விட உயரத்தில் இருக்கின்றான்; ஆயினும் அவனுக்குக் கீழே வேறு ஒருவனும் இருக்கிறான் எனக் கூற முடியாது. அவன் எல்லாவற்றையும் விட மறைவானவன் ஆவான்; ஆயினும் அவனை விட அதிகமாக ஒருவர் வெளிப்படையாக இருக்கின்றார் என்று கூற முடியாது.

அவன் சுயமாக உயிருள்ளவன் ஆவான். மேலும், எல்லாப் பொருளும் அவன் மூலமாக உயிருடன் இருக்கின்றன. அவன் சுயமாக

நிலைபெற்றிருக்கின்றான்; எல்லாப் பொருள்களும் அவன் மூலமாக நிலைபெற்றிருக்கின்றன. எல்லாப் பொருள்களையும் அவன் தாங்கிக் கொண்டிருக்கிறான். அவனைத் தாங்குவது எதுவுமில்லை.

அவனையன்றி தானே பிறந்தது எதுவும் இல்லை; அல்லது அவனையன்றி உயிருள்ளதாக இருக்கக் கூடியதும் எதுவும் இல்லை. அவன் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளான்; ஆயினும் எவ்வாறு சூழ்ந்துள்ளான் எனக் கூற முடியாது. அவன் வானம், பூமி ஆகியவற்றிலுள்ள ஒவ்வொரு பொருளின் ஒளியாவான். ஒவ்வோர் ஒளியும் அவன் கையினாலேயே ஒளிபெற்றது. மேலும், அவனுடைய பிம்பமேயாகும்.

அவன் எல்லா உலகங்களையும் படைத்து காத்தோம்புபவன் ஆவான். அவனிடமிருந்து பரிபாலனம் பெறாததும் சுயமாக இருக்கிறதுமான எந்த ஓர் ஆன்மாவும் இல்லை. அவனிடமிருந்து கிடைக்கப் பெறாத, சுயமாக இருக்கும் எந்த ஆற்றலும் எந்த ஆன்மாவுக்கும் இல்லை.' **(**லெக்சர் லாஹூர். ரூஹானீ கஸாயின். தொகுதி **20** பக்கம் **152-153)**

எனவே, உலகில் எத்தனை மார்க்கங்கள் உள்ளனவோ அவை அனைத்தும் உண்மையில் ஒரே இறைவனின் பக்கம் அழைக்கக் கூடியவையாக இருக்கின்றன. ஓரிறைவனுடன் உண்மையான தொடர்பு நிலைபெறுவதுதான்

மார்க்கங்கள், பிற மார்க்கங்களுடன் சமாதானம் செய்து கொள்வதற்கான இரகசியமாகும். இதைத் தவிர வேறு எந்த வழிமுறையும் இல்லை.

இறைவனின் பக்கம் அடியார்களைத் திருப்பி அழைத்துச் செல்லுங்கள். இறைவனே அடியார்களை ஒருவரையொருவர் சந்திக்க வைப்பான். முன்னரே அடியார்களை சந்தித்து மேலே சென்றவர்கள்தான் இறைவன் வரை சென்றடைகின்றார்கள்.

எவர்கள் அடியார்களின் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு இறைவன் பக்கம் செல்கிறார்களோ அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையில் எப்போதும் இடைவெளி அதிகமாகிக் கொண்டே செல்கிறது. அது மனதின் ஏமாற்றுதல் ஆகும்.

எனவே இறுதியாக மீண்டும் ஒருமுறை நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். எங்களுடன் மேலான முறையில் நடந்து கொண்ட, எல்லையற்ற அன்புடன், திறந்த மனதுடன் எங்களை வரவேற்ற எங்களின் சீக்கிய சகோதரர்களே! நான் எங்கெல்லாம் சென்றேனோ, எந்தெந்தத் தெருக்களை கடந்து சென்றேனோ அங்கு நான் சீக்கியர்களை, அவர்கள் வாசலில் நின்று மிகவும் அன்புடனும், நேசத்துடனும் கை அசைப்பதைப் பார்த்தேன். தங்கள் வீடுகளுக்கு அழைப்பதைப் பார்த்தேன். எதுவரை என்றால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பாசம் மிக்க ஒரு சிறுவன் வீட்டின் மேல் மாடியில் நின்று கொண்டு

எங்கள் வீட்டிற்குக் கண்டிப்பாக வாருங்கள் என கை கூப்பியவாறு வேண்டினான். நான் அவர்களது வீட்டிற்கு சென்றேன். அங்கு பால் அருந்தினேன். இந்த எல்லா விஷயங்களையும் சிந்தித்தபோது எனக்குத் தோன்றியதாவது, இறைவனின் கருணை எனும் பால் எல்லாருக்கும் சரிசமமானது. அனைத்து மனிதர்களையும் முன்னேற்றமடையச் செய்வதற்கு இறையன்பு என்ற ஒரே பால்தான் இருக்கிறது. அது இல்லாமல் எந்த வாழ்வும் இல்லை.

எனவே உங்கள் கருத்து வேறுபாடுகளை ஒரு பக்கம் வைத்து விடுங்கள். ஆனால் ஏகத்துவத்திற்கு உங்களுக்குள் அத்தகைய ஓர் அன்பை உருவாக்க சந்தர்ப்பம் கொடுங்கள். அத்தகைய உள்ளத்தின் ஆர்வத்தை உருவாக்க சந்தர்ப்பம் கொடுங்கள்; அதற்குப் பிறகு நிறங்களின் வித்தியாசமும் நம்மை தூர விலக்க முடியாது; புவியியல் வித்தியாசமும் நம்மை தூர விலக்க முடியாது; மார்க்க வித்தியாசமும் நம்மை தூர விலக்க முடியாது. அத்தகைய ஏக இறைவனின் அன்புதான் நம்மை ஒன்று சேர்க்க முடியும். மேலும் எனது கண்களால் இதற்கான பல அன்பிற்குரிய காட்சிகளை நானே கண்டிருக்கிறேன்.

தாருல் அமான் (அமைதியை வழங்கும் வீடு) என இறைவன் கூறியிருக்கும் இந்தக் காதியானை எப்போதும் தாருல் அமான் ஆகவே அல்லாஹ் இருக்க வைப்பானாக. மேலும், இதன்

அமைதி உலகில் பரவிக் கொண்டிருக்கட்டுமாக. இந்த அமைதியை உலகில் பரப்புவதில் சீக்கியர்கள் ஆகிய நீங்களும் எங்களுக்கு உதவி செய்யுங்கள். இந்துக்கள் ஆகிய நீங்களும் எங்களுக்கு உதவி செய்யுங்கள். உலகத்தில் உள்ளவர்களே வாருங்கள்! அமைதியுடன் உயிர் வாழும் இரகசியத்தை இந்தக் காதியான் கிராமத்திலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். அமைதியுடன் உயிர் வாழ்வதற்கான முறையைக் கற்றுக் கொள்ளுங்கள் என்ற தூதுச் செய்தியை உங்களுடன் சேர்ந்து நாங்களும் உலகிற்குக் கொடுப்போம்.

இன்று நாங்கள் அனைவரும் சேர்ந்து உங்களை அமைதியின் உலகின் பக்கம் அழைக்கின்றோம். இந்த உலகம் ஓரிறைவனின் உலகமாகும். இந்த உலகத்திற்கு வராமல் உண்மையில் அமைதி கிடைக்க முடியாது.

இப்போது நான் இந்து மதத்திலிருந்து ஓரிறைவனைப் பற்றிய போதனைகளின் முன் மாதிரிகளை உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறேன். கீதையில் ஒரு சுலோகம் உள்ளது. அதன் மொழியாக்கம் 'தில் கீ கீதா' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அத்தியாயம் 8 சுலோகம் 20-ல் இவ்வாறு உள்ளது:

'மறைவிலும் மறைவாக ஒருவன் இருக்கின்றான். அவனிடம் குறையும் இல்லை;

அந்த இருப்பு அழிந்து போகக் கூடியதுமல்ல. எவருடையதும் எதுவும் எஞ்சி இருப்பதில்லை. அந்த இறைவனின் இருப்பு மட்டுமே எஞ்சி இருக்கிறது.'

திருக்குர்ஆன் இந்தக் கருத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறுகிறது:

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۚ وَّيَبْقٰى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ وَالْاِكْرَامِ ۚ

**(55:27,28)**

அதாவது, 'இவ்வுலகில் இருப்பவை எல்லாம் கண்டிப்பாக அழிந்து விடும். எதன் பக்கம் உமது கம்பீரமான, கண்ணியத்திற்குரிய இறைவனின் கவனம் இருக்குமோ அது மட்டுமே நிலைத்திருக்கிறது.'

அதாவது, இறைவனின் கவனத்தால் நாம் உயிருடன் இருக்கிறோம். இந்த கவனம் திரும்பி விட்டால், பிறகு நாம் எந்நிலையிலும் மரணித்து விடுவோம். வெளிப்படையான முறையிலும் உயிருடன் இருக்க முடியாது; ஆன்மீகமான முறையிலும் உயிருடன் இருக்க முடியாது.

பிறகு 'தில் கீ கீதா' என்பதிலிருந்தே இன்னொரு சுலோகத்தை உங்களுக்கு முன்னால் வைக்கின்றேன். அத்தியாயம் 8 சுலோகம் எண் 22-ல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

'எவர்கள் என்னை களங்கமற்ற முறையில் வணங்குகிறார்களோ, உள்ளத்தில் இரட்டை வேடம் வைக்காமல் இருக்கிறார்களோ

அவர்களின் எல்லாத் தேவைகளையும் நான் நிறைவேற்றுகிறேன். அவர்கள் காலையும் மாலையும் எனது பாதுகாப்பில் இருக்கின்றனர்.'

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் **(**அலை**)** அவர்கள் கூறுகிறார்கள்**:**

'நீர் உள்ளத்திலிருந்து இரட்டை வேடத்தை அழிக்க வேண்டும்.

வானம் பூமியின் எஜமானனுக்கு முன்னால் தலை குனிந்து விடுவீராக.' **(**அல்ஃபஸ்ல் **13** ஜனவரி **1928)**

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்**:**

فَادْعُوا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ ۝ **(40:15)**

அதாவது, 'நிராகரிப்பவர்கள் எவ்வளவு தான் வெறுத்தாலும் நீங்கள் ஓரிறைவனை முழுமையாகவும் கலப்பற்ற முறையிலும் முழுமையான நன்றியுணர்வுடனும் அழையுங்கள்.'

பகவத் கீதையில் பக்கம் **365-**ல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது**:**

'அர்ஜுனா**!** நீ செய்கின்ற செயலும், நீ உண்ணும் உணவும், நீ ஓதும் மந்திரமும், நீ கொடுக்கும் தானமும், நீ செய்யும் தவமும், அதாவது, விடா முயற்சியும் ஆகிய அவை அனைத்தும் பரமேசுவரனாகிய எனக்கே உரியது.

எனக்காவே நீ எல்லா வேலைகளையும் செய். என் பெயரிலேயே எல்லா தானத்தையும் செய். உனது உண்ணலும், குடித்தலும்

எனக்காகவே இருக்கட்டும். உழைப்புடன் நீ வாழ்வது எனக்காக இருக்கட்டும்.'

இந்தக் கருத்தைத் திருக்குர்ஆன் மிகவும் அருமையான கோணத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது:

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ (6:163)

முஹம்மதே! நீர் கூறுவீராக. பாருங்கள். நான் முழுமையாக இறைவனுக்காக ஆகி விட்டேன். எனது இறைவணக்கங்களும், எனது தியாகங்களும், நான் ஒவ்வொரு நாளும் உயிர் வாழ்வதும், ஒவ்வொரு நாளும் மரணிப்பதும் ஆகிய எல்லாம் இறைவனுக்காக ஆகி விட்டன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தக் கருத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

'மனிதனுக்கு இறைவனுடன் உள்ள அன்பு, அவன் மரணிப்பதும் அவன் உயிர் வாழ்வதும் தனக்காக இல்லாமல் இறைவனுக்காக ஆகிவிடும் படித்தரம் வரை சென்றடைந்து விட்டால், அன்பு செலுத்துபவர்களுடன் எப்போதும் அன்பு செலுத்தி வந்திருக்கும் இறைவன் தனது அன்பை அவர் மீது இறக்குகிறான்.

அந்த இரண்டு அன்புகளும் இணைவதால் மனிதனுக்குள் ஓர் ஒளி உருவாகிறது. அதை உலகம் அடையாளம் காண்பதில்லை. அதைப் புரியவும் முடியாது. உலகம் அதை அடையாளம்

காணாததன் காரணமாகவே ஆயிரக்கணக்கான உண்மையாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் உலகில் கொல்லப்பட்டனர். உலகம் அவர்களின் ஒளிமிக்க முகத்தைப் பார்க்க முடியாமல் போனதால்தான் அவர்கள் தந்திரக்காரர்கள் என்றும், சுயநலக்காரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.' (தக்ரீர் ஜல்ஸா மஸாஹிப். பக்கம் 76)

எனவே, பிரகாசமான ஒளிகளை எதிர்ப்பவர்கள், மார்க்க சான்றோர்களைக் கொல்லுவதற்கு முனைபவர்கள், அவர்கள் தாமே இறைவனிடமிருந்து தொடர்பைத் துண்டித்து இருப்பதன் விளைவாக ஓர் இருளின் நிலையில் வாழ்க்கை நடத்துகின்றவர்களாக இருக்கின்றனர். குருடர்களுக்கு சரியான வழி எது எனத் தெரியாததனால் சில நேரத்தில் சுவர்களில் முட்டிக் கொள்வதைப் போன்று உள்ளத்தால் குருடாக இருக்கின்ற இவர்களின் நிலையுமாகும்.

ஆனால், எவர்கள் இறைவனை உண்மையாக நேசிக்கின்றார்களோ அவர்களுக்கு கண்டிப்பாக ஒளி வழங்கப்படுகிறது. அவர்கள் எந்த மார்க்கத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்தாலும், அந்த அன்பின் விளைவாக இறைவனுடன் தொடர்பு கொண்டவர்களை உள்ளத்தின் கண்களால் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். இறைவனுடன் உண்மையான அன்பு செலுத்துபவர் இறைவனுடன் உண்மையாக

அன்பு செலுத்தும் இன்னொருவரை வெறுப்பது என்பது சாத்தியமேயில்லை. இவர் யார் என்பதை அவருடைய உள்ளத்தின் கண் எடுத்துக் கூறுகிறது. அது எத்தகைய ஒளி என்றால், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்கின்றனர். மேலும் ஒருவர் மற்றவருக்காக அன்பு செலுத்துவதில் ஆர்வம் கொள்கின்றனர்.

பகவத் கீதை பக்கம் 664-ல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

'அர்ஜுனா! எல்லாவிதத்திலும் அந்த ஈசுவரனின் பாதுகாப்பிலேயே நீ பாதுகாப்பு அடைந்தால் நீ அவனுடைய கருணையால் உயர்ந்த, அழியாத சாந்தியையும் அந்தஸ்தையும் பெற முடியும்.'

'நீ உன்னைப் பாதுகாக்கும் இடமாகவும், உன் அடைக்கலமாகவும் அவனையே ஆக்குவாயாக. உன்னை அந்த இருப்புடனேயே இணைப்பாயாக.

நீ அவனது கருணைக்குள் வந்து விடுவாய். அவனிடமிருந்து நீ அமைதியையும் நிலைபெற்றிருத்தலையும் பெற்று விடுவாய்.'

திருக்குர்ஆன் கூறுகிறது:

اَلَّذِيْنَ اٰمَنُوْا وَ تَطْمَىِٕنُّ قُلُوْبُهُمْ بِذِكْرِ اللّٰهِ ؕ اَلَا بِذِكْرِ اللّٰهِ تَطْمَىِٕنُّ الْقُلُوْبُ ؕ (13:29)

'நம்பிக்கை கொள்பவர்களுக்கு அவர்கள் நம்பிக்கை கொண்ட பிறகு அவர்கள் இறைவனை நினைவு கூருவதிலேயே மன அமைதி கிடைக்கிறது. அல்லாஹ்வை நினைவு கூருவதாலேயே அவர்கள் அமைதியைப் பெறுகின்றனர்.'

اَلَا بِذِكۡرِ اللّٰهِ تَطۡمَٮِٕنُّ الۡقُلُوۡبُ என்று கூறுகிறான். மனிதன் என்ன விரும்பினாலும் செய்யட்டும்; எந்தப் பக்கம் விரும்பினாலும் ஓடட்டும். ஆனால் இறைவனை நினைவு கூராமல், இறையன்பு இல்லாமல் மனிதனுக்கு அமைதி கிடைக்க முடியாது.

தில் கீ கீதாவில் அத்தியாயம் 18 சுலோகம் 66-ல் இவ்வாறு உள்ளது:

'நீ எல்லா வழிகளையும் விட்டு விடுவாயாக. எனது வழியை மேற்கொள்வாயாக.

எனது சன்னிதியில் வந்து என்னிடம் அடைக்கலத்தை வேண்டுவாயாக. நான் உனது எல்லாப் பாவங்களையும் தூர விலக்கி விடுவேன்.

கவலைப்படாதே. நான் உன்னை மகிழ்ச்சியாக்கி விடுவேன்.'

وَالَّذِيۡنَ اٰمَنُوۡا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ لَنُكَفِّرَنَّ عَنۡهُمۡ سَيِّاٰتِهِمۡ وَ لَنَجۡزِيَنَّهُمۡ اَحۡسَنَ الَّذِىۡ كَانُوۡا يَعۡمَلُوۡنَ ۝ (29:8)

'எவர்கள் நம்பிக்கை கொண்டு, அந்த நம்பிக்கைக் கேற்ப செயல்பட்டார்களோ நாம்

அவர்களின் தீமைகளை அவர்களிடமிருந்து அகற்றி விடுவோம். மேலும் அவர்கள் செய்த செயலுக்கேற்ப அவர்களுக்கு மிகச் சிறந்த நற்கூலியை நாம் அவர்களுக்கு வழங்குவோம்.'

நேரமின்மையின் காரணமாக மற்ற சான்றுகளை விட்டு விடுகிறேன். ஓரிறை கொள்கை மற்றும் இறையன்பு ஆகியவற்றிக்குப் பிறகு மனித அனுதாபம் பற்றி சீக்கிய மார்க்கத்திலும், இந்து மார்க்கத்திலும் இருக்கின்ற விஷயங்களிலிருந்து சில முன்மாதிரிகளை எடுத்துரைக்கின்றேன்.

குரு கிரந்து சாஹிப் பக்கம் 1299 ஐந்தாவது மஹல்லாவில் இவ்வாறு வருகிறது. அதன் பொருள்:

'நமது கொள்கையின்படி எவரும் அந்நியர் அல்லர். எல்லாரும் நம்மவர்கள்தான். நமது எதிரி என்று எவருமில்லை. அனைவரிடமும் நமக்கு அன்பும், நேசமும் இருக்கிறது.'

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'நான் எல்லா முஸ்லிம்கள், கிறித்தவர்கள், இந்துக்கள் மற்றும் ஆரியர்கள் ஆகியோரிடம் ஒரு விஷயத்தை வெளிப்படுத்துகிறேன். உலகில் எனக்கு யாரும் பகைவர் இல்லை. கருணையுள்ள தாய் தனது பிள்ளைகளிடம் அன்பு செலுத்துவது போன்று நான் மனித குலத்துடன் அன்பு

செலுத்துகிறேன். இன்னும் கூறுவதென்றால், அதை விட அதிகமாக அன்பு செலுத்துகிறேன். உண்மையைக் கொலை செய்கின்ற அந்த அபத்தமான கொள்கைகளுக்கு மட்டும் நான் எதிரியாவேன். மேலும் மனிதனுக்கு அனுதாபம் காட்டுவது எனது கடமையாகும்.'(அர்பயீன் எண் 1 ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 344)

பிறகு குரு கிரந்து சாஹிபில் ஹஸ்ரத் பாபா நானக் சாஹிப் அவர்களின் கூற்று பக்கம் 991, முதல் மஹல்லாவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

'மனிதன் தன்னை பலவீனமானவனாகவும் தீயவனாகவும் கருதட்டும். மேலும் முழு உலகத்தையும் சிறந்ததாகவும் நல்லதாகவும் கருதட்டும்.'

இது பணிவின் மிகவும் தூய, உயர்தரமான போதனையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'உங்கள் எண்ணத்தில் எல்லாரையும் விட தீயவராக உங்களைக் கருதுங்கள். ஒருவேளை இதனால் நீங்கள் இறைவனை அடையும் வாசலில் நுழையலாம்.'

நீங்கள் உங்களை மற்ற அனைவரையும் விட குறைந்தவர்களாகக் கருதினால், குறைந்த தரம் கொண்டவராகக் கருதினால் இந்த வழியின்

மூலமாகவே உங்களுக்கு அல்லாஹ் கிடைப்பது சாத்தியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இந்தக் காலத்தில் இமாமாக ஆக்கி இருப்பதற்கு காரணமாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

'அவனுக்கு உமது பணிவான வழிகள் பிடித்து விட்டன.'

எவரை நான் காலத்தின் இமாமாக ஆக்கியிருக்கின்றேனோ அத்தகையவரே! நான் உம்மை நீர் பெரிய மனிதர் என்பதால் இமாமாக ஆக்கவில்லை. நீர் உம்மை முற்றிலும் மாய்த்து கொண்டு விட்டீர்; மண்ணாகி விட்டீர்; உமது இருப்பை கொஞ்சமும் விட்டு வைக்கவில்லை என்பதால் இமாமாக ஆக்கி இருக்கிறேன். இத்தகைய பணிவுக்குப் பிறகு தான் இறைவன் அடியார்களுக்கு தோற்றமளிக்கிறான். இது இல்லாமல் இறைவன் கிடைப்பது சாத்தியம் இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

'தனது அகந்தையை மரணிக்கச் செய்வது மட்டும்தான் மனிதனின் வேலை ஆகும். நான் ஞானங்களில் வளர்ந்தவன் என்ற இந்த ஷைத்தானிய அகந்தையை விட்டு விட்டு, ஓர் அறிவிலியைப் போன்று தன்னை கருதிக்கொள்ள வேண்டும். மேலும், துஆவில் ஈடுபட்டிருக்க

வேண்டும். அப்போது ஏகத்துவத்தின் ஒளி இறைவன் புறமிருந்து அவன் மீது இறங்கும். மேலும், ஒரு புதிய வாழ்வை அவனுக்கு வழங்கும்.' (ஹக்கீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 148)

பிறகு குரு கிரந்து சாஹிப் பக்கம் 141, முதல் மஹல்லாவில் இவ்வாறு வருகிறது. அதன் பொருள்:

'பிற மனிதனின் உரிமையைப் பறிப்பது என்பது முஸ்லிம்களுக்கு பன்றி இறைச்சியை சாப்பிடுவதும், இந்துக்களுக்கு பசு இறைச்சியை சாப்பிடுவதும் போன்றதாகும். அவருக்கு இறைவன் உதவி செய்ய மாட்டான்.'

இது நீதியை நிலைநாட்டுவதற்கான, ஒருவர் மற்றவரின் செல்வத்தை கொள்ளை அடிப்பதிலிருந்தும் தடுப்பதற்கான எவ்வளவு தூய்மையான போதனையாகும்! எல்லா மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களும் தத்தமது மார்க்கத்தின் தூய போதனைகளின் பக்கம் திரும்பிச் சென்றால் அதுவே அமைதிக்கான ஒரு வழியாகும். அதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை.

ராகத் நாமா பாயீ நந்திர் லால் என்பதில் இவ்வாறு வருகிறது. அதன் பொருள்:

'இறைவனின் படைப்பினங்களைப் பார்த்து அவற்றிக்கு துக்கங்களைக் கொடுக்காதீர்கள். இறைவனின் படைப்பிங்களுக்கு துக்கத்தைக்

கொடுப்பவரை இறைவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டான்.'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் கருத்தை இவ்வாறு கூறியிருக்கிறார்கள்:

مَنْ لَا يَرْحَمِ النَّاسَ لَا يَرْحَمْهُ اللّٰهُ

(சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் ஃபஸாயில், பாபு ரஹ்மதுஸ் ஸிப்யானி வல் இயால்)

பொருள்: 'பாருங்கள். ஒரு மனிதர் இறைவனின் அடியார்கள் மீது கருணை காட்டாவிட்டால் அல்லாஹ் அவர் மீது கருணை காட்ட மாட்டான்.'

எனவே இந்த விஷயத்தை அவசியம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அது இல்லாமல் உண்மையில் நாம் மார்க்கத்தின் முதல் குறிக்கோளையும் பெற முடியாது; இரண்டாவது குறிக்கோளையும் பெற முடியாது. மார்க்கத்திற்கு இரண்டு குறிக்கோள்தான் இருக்கிறன. ஒன்று, மார்க்கம் மனிதனை, மனிதனுக்கு அருகில் கொண்டு வருவது. இரண்டாவது, மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவது.

இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: 'சிறியவர்களின் மீது கருணை காட்டாதவருக்கும் பெரியவர்களுக்கு கண்ணியம் அளிக்காதவருக்கும் நம்முடன் எந்தத் தொடர்பும் இல்லை.' (திர்மிதி. கிதாபுல் பிர்ரி

வஸ்ஸிலா, பாபு மாஜாஅ ஃபீ ரஹ்மத்திஸ் ஸிப்யான்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''இந்தப் போதனையின் சுருக்கம் இதுதான்..... எந்த மார்க்கத்தைச் சார்ந்தவருக்கும், எந்த சமுதாயத்தைச் சார்ந்த மனிதருக்கும், எந்தப் பிரிவைச் சார்ந்த மனிதருக்கும் தீமை செய்யவோ, நஷ்டமிழைக்கவோ எண்ணாதீர்கள். (அவர் எந்த மார்க்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே!) எல்லாருக்காகவும் உண்மையான முறையில் நல்லுரை வழங்குங்கள். உங்களுடைய சபைகளில் குழப்பத்தை விளைவிக்கின்றவர்களும், தீமை செய்பவர்களும், ஒழுங்கீனமானவர்களும், தீய நடத்தை உடையவர்களும் ஒரு போதும் வர வேண்டாம். எல்லாத் தீமைகளிலிருந்தும் தப்பித்திருங்கள். எல்லா நன்மைகளைப் பெறுவதற்கும் முயற்சி செய்யுங்கள்.'' (கஷ்ஃபுல் ஃகிதா. ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 187, 188)

ஹஸ்ரத் பாபா குருநானக் அவர்கள் உழைப்பின் அந்தஸ்தையும் கண்ணியத்தையும் பற்றி எவ்வளவு அருமையாகக் கூறுகிறார்கள் பாருங்கள்! அவர்கள் கூறுகிறார்கள்: ''கையினால் உழைக்கும்போது ஏழைகளுக்கு உதவும்போது இறைவனின் வழி கிடைக்கும்.'' (குரு கிரந்து சாஹிப் பக்கம் 1245)

இந்த அறிவுரையின் ஓர் அம்சத்தின்படி சீக்கிய சமுதாயம் மிகவும் கலப்பற்ற முறையிலும் நன்றியுணர்வுடனும் செயல்பட்டிருக்கிறது. அது கையினால் உழைப்பதாகும்.

நான் இந்தியா பாக் பிரிவினைக்கு முன்னர் பல காலமாக சீக்கியர்களுடன் இருந்திருக்கிறேன். லாஹூரிலுள்ள அரசு கல்லூரியிலும் பல சீக்கிய மாணவர்களுடன் எனது நட்பு இருந்தது. காதியானுக்குச் சுற்றுப் புறத்தில் முழுவதும் சீக்கியர்களே இருந்தனர். **நான் எனது வாழ்வில் சீக்கியர்களை ஒருபோதும் பிச்சை எடுக்கப் பார்க்கவில்லை. மற்ற இந்துக்களின் முன்னால் கையேந்தி, எனக்கும் ஏதாவது தருமம் செய்யுங்கள் எனக் கேட்டதாக நான் ஒரு சீக்கியரைக் கூடப் பார்க்கவில்லை.** ஹஸ்ரத் பாபா குருநானக் அவர்களின் இந்த போதனைதான் சீக்கியர்கள் மீது மிகவும் அதிக தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. இந்தச் சமுதாயம் மிகவும் உழைக்கக் கூடியதாகும். மேலும் தமது கையின் தூய சம்பாத்தியத்தினால் உண்கின்றது. ஏழைகளுக்கு எந்த அளவுக்கு உதவி செய்கிறது என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஏனெனில் இந்தச் சமுதாயத்தில் ஏழைகள் மறைந்திருக்கின்றனர். ஏனெனில் சுய மரியாதையின் காரணமாக, அவர்கள் தமது கையினால் உழைத்து சாப்பிட வேண்டும் என்ற உணர்வின் காரணமாக சீக்கிய சமுதாயத்திற்கு நம்மிடம் எத்தனை ஏழைகள் இருக்கின்றனர்?

ஏழைகள் இருக்கின்றனரா இல்லையா என்பதைப் பற்றி தெரியாமல் இருக்கிறதோ என்னவோ? அல்லாஹ் நன்கறிவான். ஆனால் நான் இந்த உலகில் எங்கு பயணம் செய்துள்ளேனோ, கட்டாயம் அங்கு சீக்கிய குர்துவாராக்களில் மற்ற ஏழைகளுக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடு இருக்கிறது என்பதைப் பார்த்துள்ளேன்.

அண்மையில் நான் கென்யா சென்றேன். அங்கேயும் ஒரு பெரிய குர்துவாராவைப் பார்த்தேன். அங்கு காணப்பட்ட முழு சுதந்திரம் என்னவென்றால், குறித்த நேரத்தில் எந்த மார்க்கத்தைச் சேர்ந்த மனிதராக இருந்தாலும், எவராக இருந்தாலும், கருப்பராக இருந்தாலும் வெள்ளையராக இருந்தாலும் அவருக்கு அந்த லங்கர்கானாவிலிருந்து கண்டிப்பாக உணவு கிடைக்கும். அது இந்த தூய போதனைகளின் விளைவாகும்; அதன் நல்ல கனிகளாகும்.

மரம் அதன் கனிகளால் அறியப்படுகிறது என ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறினார்கள். எனவே மார்க்க போதனை பற்றிய கேள்வி மட்டும் அல்ல. அந்தப் போதனையை யார் கலப்பற்ற முறையில் ஏற்றுக் கொள்கின்றார்; அதன்படி செயல்படுத்திக் காட்டுகிறார் என்பது கேள்வியாகும். அவருக்கே கனி கிடைக்கிறது. ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்பவர்கள் அதிலிருந்து முகந்திருப்பி விட்டால் அவர்களுக்கு எந்தக் கனியும் கிடைக்காது; அந்த மரம் பட்டுப் போய் விடும்.

**(சீக்கியர்களாகிய) நீங்கள் மிகவும் கலப்பற்ற முறையில் இந்தப் போதனைகளின்படி செயல்பட்டுள்ளீர்கள்; அதன் நல்ல கனிகளைப் புசித்துள்ளீர்கள்; உலகிற்குக் காட்டியிருக்கிறீர்கள்.** அவ்வாறே உண்மையான உள்ளத்துடன், ஹஸ்ரத் குருபாபா நானக் அவர்களின் மற்ற போதனைகளையும் ஒப்புக் கொள்ளுங்கள் என நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். இதிலேயே உங்களது வாழ்வு உள்ளது. இதிலேயே இந்திய சமுதாயத்தின் நலன் உள்ளது.

நீங்கள் குரு பாபா நானக் அவர்களின் போதனைகளை உங்களிடத்தில் உயிரூட்டினால் இந்த இடங்களில், ஏன்! இந்த இடங்களை விட்டு வெளியிலுள்ள இடங்களிலும் வாழ்விற்கான நம்பிக்கை உருவாகிவிடும் என நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். மேலும் இதிலேயே வாழ்வின் இரகசியம் இருக்கிறது.

திருக்குர்ஆனுமே இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறது. நான் ஏன் கூறுகிறேன் என்றால், பாருங்கள்! திருக்குர்ஆன் 1400 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கருத்தைக் கூறி விட்டது. ஆனால் முஸ்லிம்கள் இதை மறந்து விட்டு எத்தகைய அழிவின் வாழ்க்கையை ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

நான் கராச்சி சென்றாலும், லாகூர் சென்றாலும் அல்லது எந்த முஸ்லிம் இடங்களில், கிராமங்களில் சென்றாலும், அது பாகிஸ்தானைச் சேர்ந்ததாயினும், இந்தியாவைச் சேர்ந்ததாயினும்

முஸ்லிம் பிச்சைக்காரர்கள் தென்படுகின்றனர். அது எனது உள்ளத்திற்கு மிகவும் துன்பத்தைத் தருகிறது. அவர்களுக்குத் தொண்டு செய்ய கண்டிப்பாக நான் முயற்சி செய்கின்றேன்.

ஆனால் நான் கூறுகின்றேன்; பாருங்கள்! ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் திருக்குர்ஆன் ஆகுமான உணவின் பக்கம் கவனமூட்டியிருக்கிறது; சொந்த கையினால் சம்பாதித்த உணவை உண்ணுமாறு அறிவுரை கூறியிருக்கிறது. ஆயினும் இந்த சமுதாயம் இந்தப் போதனையில் இருந்து தொடர்பைத் துண்டித்துக் கொண்டது. அவர்களுக்கு நன்மைக்கான பலன் கிடைக்கவில்லை. எனவே வேருடன் தொடர்பை நிலைநாட்டாமல் எந்த மரத்திற்கும் பழம் உருவாகாது. தத்தமது தூய போதனைகளுடன் மேன்மையுடனும் தூய உள்ளத்துடனும் தொடர்பை உருவாக்கினால் கிளைகள் எவ்வாறு இனிய பழங்களினால் நிரம்பி விடுகின்றன என்று பாருங்கள். மேலும் அந்தப் பழங்களினால் மற்ற உலகமும் பயன் பெறும்.

திருக்குர்ஆன் கூறுகிறது:

وَاَنْ لَّيْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَا سَعٰى ﴿٤٠﴾ وَاَنَّ سَعْيَهٗ سَوْفَ يُرٰى ﴿٤١﴾ ثُمَّ يُجْزٰىهُ الْجَزَآءَ الْاَوْفٰى ﴿٤٢﴾ **(53:40-42)**

(பொருள்: மனிதன் எதற்காக முயற்சி செய்கின்றானோ அதுவே அவனுக்குக் கிடைக்கிறது. மேலும், அவன் தன்னுடைய

முயற்சியின் விளைவை நிச்சயமாக கண்டு கொள்வான். பின்னர் அவனுக்கு முழுமையான நற்பலன் வழங்கப்படும்.)

இது எவ்வளவு தொடரான நிரந்தரமான சட்டமாகும்! இதில் நீங்கள் எந்த மாற்றத்தையும் காண மாட்டீர்கள். பாருங்கள்! மனிதனுக்கு அவன் தன் கைகளால் சம்பாதித்ததுதான் கிடைக்க வேண்டும். தனது உழைப்பின் மூலமாக சம்பாதிப்பதிலேயே அவனுக்கு உரிமை உள்ளது. இங்கு **ஸஆ** என்ற சொல் வந்துள்ளது. அது வெறும் கூலித் தொழில் என்பதன்று. மாறாக, முயற்சி என்பதாகும். அது சிந்தனையின் முயற்சியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த வகையான முயற்சியாக இருந்தாலும் சரி! மனிதன் எதை தனது சொந்த முயற்சியினால் சம்பாதிக்கிறானோ அதுவே அவனுக்குரியதாகும் என்ற இரகசியத்தை அவன் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் நீங்கள் முயற்சி செய்வீர்கள் என்றால் நான் கண்டிப்பாக உங்களுக்கு நற்கூலி தருவேன் என இறைவன் உங்களுக்கு வாக்குறுதி வழங்குகிறான்.

ثُمَّ يُجْزٰىهُ الْجَزَآءَ الْاَوْفٰى

பிறகு நற்கூலி வழங்கிய பின்னர் அவனுக்கு மேலும் அதிகமாக வழங்குவான். அதிகமாக நிரப்பி நிரப்பி நற்கூலிகள் வழங்குவான்.

எனவே, சமுதாயங்களுடைய வாழ்வின் இரகசியம் உழைப்பில் உள்ளது. தூய உள்ளத்துடன் உண்மையான உணவைத் தேடுவதில் உள்ளது. முஸ்லிம்களிடம் எவ்வளவு அருமையான போதனை இருந்தது! ஆனால் அந்தோ! அவர்கள் அதன் பக்கம் கவனம் செலுத்தாததன் விளைவாக எங்கிருந்து எங்கே சென்று விட்டனர்!

ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தான தருமங்கள் செய்யுமாறு போதித்திருக்கின்ற அதே நேரத்தில்,

اَلْيَدُ الْعُلْيَا خَيْرٌ مِّنَ الْيَدِ السُّفْلٰى

என்றும் கூறினார்கள். அதாவது, கீழே இருக்கின்ற கையை விட மேலே இருக்கின்ற கை எந்நிலையிலும் உயர்ந்ததாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (புகாரி, கிதாபுன் நஃபகாத், பாபு உஜூபின் நஃபகதி அலல் அஹ்லி வல் இயால்)

இந்தப் போதனையை எந்த அளவுக்கு அழுத்தமாகக் கூறினார்கள் என்றால், ஒரு முறை ஒரு நபித் தோழர் ஒரு தெருவில் சென்று கொண்டிருந்தார். அவரது கையிலிருந்து சவுக்கு கீழே விழுந்து விட்டது. ஒரு சிறுவன் ஓடி வந்து அதை எடுத்துக் கொடுக்க முயற்சி செய்தான். அதற்கு முன் அந்த நபித்தோழர் விரைவாக கீழே இறங்கி அதை எடுத்துக் கொண்டார். நான் வந்து கொண்டிருந்தேனே! நீங்கள் ஏன்

கஷ்டப்பட்டீர்கள் என சிறுவன் கேட்டான். உங்கள் வேலையை உங்கள் கைகளால் செய்யுங்கள் என்றே எனது எஜமானர், தலைவர் எனக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். எனவே நீ எனக்கு வந்து நான் கேட்காமலேயே அதை நீ என்னிடம் எடுத்துக் கொடுப்பதைக் கூட நான் விரும்பவில்லை எனக் கூறினார்.

இதுதான் மனிதர்களின் வாழ்க்கையில் புரட்சியை உருவாக்கக் கூடிய போதனையாகும். இது தொடர்பாக தவறான புரிதல் மற்றும் தவறான சூஃபியிஸத்தின் விளைவாக சிலர் உலகத்தை விட்டும் தொடர்பை துண்டித்து விட்டு, மக்களிடமிருந்து உணவைப் பெறுவதையே இறைவனைச் சார்ந்திருத்தல் எனக் கருதுகின்றனர். அவ்வாறு ஒருபோதுமல்ல.

ஒரு முஸ்லிம் வலியுல்லாஹ்வின் (இறை நேசரின்) சம்பவத்தை நான் உங்களுக்குக் கூறுகிறேன். ஒருமுறை அவர் தனது மகனை வியாபாரத்திற்காக அனுப்பினார். வியாபாரத்தின் பல பொருள்களை அவனுக்குக் கொடுத்தார். அந்த வியாபாரக்குழு காட்டில் முகாமிட்டிருந்தது. முகாமிட்டிருக்கும்போது இரவு வந்த போது, அந்த சிறுவன் ஒரு நூதனமான காட்சியைக் கண்டான். ஒரு சிங்கம் வந்தது. அது ஒரு மிருகத்தை வேட்டையாடியது. ஒரு புதரின் கீழ் அதை இழுத்துக் கொண்டு சென்றது. உண்ண முடிந்த அளவுக்கு உண்டது. எஞ்சியதை விட்டு விட்டுச் சென்று விட்டது. அதற்குப் பிறகு

பின்னங்காலில் அடிபட்டிருந்த ஒரு கழுத்தைப் புலி தவழ்ந்தவாறு வந்து சேர்ந்தது. அந்த சிங்கம் விட்டுச் சென்ற மிருகத்திலிருந்து தனது வயிற்றை நிரப்பிக் கொண்டது. அவன் இந்தக் காட்சியைக் கண்டதும் அங்கேயே அவன் தனது எல்லாப் பொருள்களையும் வியாபாரக்குழுவிடம் கொடுத்து விட்டு வெறுங்கையுடன் திரும்பி வந்தான்.

ஏன் திரும்பி வந்தாய்? ஏன் வெறுங்கையுடன் வந்தாய் என தந்தை கேட்டபோது, இறைவன் உணவளிப்பவன் ஆவான். அதற்கான காட்சியை நான் எனது கண்களால் கண்டு விட்டேன். **எல்லா படைப்பினங்களுக்கும் அவன் பொறுப்பாளனாக இருக்கும்போது உலகின் வேலைகளில் ஈடுபடுவதற்கு எனக்கு என்ன தேவை இருக்கிறது எனக் கூறினான். அப்போது அந்தப் பெரியவர், இந்த இரகசியம் எனக்கும் தெரியும். ஆனால் சிங்கம் சாப்பிட்ட பொருளை கழுதைப் புலி சாப்பிட்டது. அப்படிப்பட்ட சிங்கமாக நீ மாற வேண்டும் என்றும், சிங்கம் சாப்பிட்டதை எதிர்பார்த்திருக்கும் கழுத்தைப் புலியாக ஆகக் கூடாது என்றும் நான் விரும்பினேன் எனக் கூறினார்.**

இதுதான் அழகிய போதனையின் சமச்சீரான நிலை. இறைவனின் அருளால் சீக்கிய சமுதாயம் இதைப் புரிந்து கொண்டுள்ளது. மேலும் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தும் இந்த இஸ்லாமிய போதனையில்

நிலைத்திருக்கிறது; செயல்படுகிறது. எதுவரை எனில், நமது ஏழைகளின் உள்ளத்தில், கேட்கும் நிலை ஏற்படுவதற்கு முன் அவர்களை சென்றடைவதற்கு மிக அதிகமாக முயற்சி செய்கிறோம். சொந்தமாக தான தருமங்கள் செய்வதை பொருத்தவரை அதை விட அதிகமாக ஜமாஅத் தன் சார்பாக தேவைகளை முழுமை செய்கின்றது. ஒவ்வோர் ஏழையும் தனது சொந்த கால்களில் நிற்பதற்கு முயற்சி செய்கிறது. கீழ் நோக்கிய பார்வையுடன் தான தருமங்களை வாங்கக் கூடியவர்களாக இல்லாமல் சுயமாகவே சொந்தக் கால்களில் நிற்கும் அளவிலும் மற்ற ஏழைகளுக்கு தொண்டு செய்யும் தகுதியைப் பெறும் அளவிலும் அவ்வாறு செய்கிறது.

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத் உலகளாவிய அளவில் இது தொடர்பாக முயற்சி செய்ய வைக்கிறது, அல்ஹம்துலில்லாஹ்! இன்று நான் இந்த மாநாட்டில் ஓர் அறிவிப்பை செய்கின்றேன். இந்தியாவிலுள்ள ஏழ்மையான இடங்களுக்கு நான் ஒரு திட்டத்தை சிந்தித்துள்ளேன். அதன் கீழ் அங்கு தொழில் தொடர்பான வேலை ஆரம்பிக்கப்படும் இன்ஷா அல்லாஹ்! அவர்களுக்கு வியாபாரம் கற்றுக் கொடுக்கப்படும். அதன் விளைவாக அஹ்மதி ஏழைகள் முழுமையாக சொந்த கால்களில் நின்று உத்வேகத்துடனும், எழுச்சியுடனும் மனித குலத்திற்கு தொண்டு செய்ய முடியும்.

திருக்குர்ஆனிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் இன்னொரு யுக்தியையும் கற்றுள்ளது. அதாவது, ஏழ்மையிலும் அது தியாகம் செய்கிறது. ஏழ்மையாக இருந்தும், தேவை உடையவர்களாக இருந்தும் மற்ற தேவை உடையவர்களுக்குத் தம்மிடம் உள்ளதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது உயர்வான படித்தரத்தின் வியத்தகு காட்சியாகும். இறைவன் பக்கம் மேற்கொள்ளும் பயணம்; ஓரிடத்தில் நிற்கக் கூடிய பயணம் அல்ல. மாறாக, ஒரு போதனையைப் பெற்ற பிறகு அதற்கு அடுத்தபடியாக ஒரு உயர்தரமும் உருவாகி விடுகிறது.

எனவே அல்லாஹ்வின் கருணையாலும், பேரருளாலும் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த உயர்ந்த படித்தரங்களின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. மேலும் எல்லா மனித குலமும் இந்த நல்ல விஷயங்களில் இதனுடன் இணைந்து கொண்டிருக்க வேண்டும் என அது விரும்புகிறது.

ஹஸ்ரத் குரு பாபாநானக் அவர்கள் கூறுகிறார்கள்:

''உலகில் மற்றவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். தொண்டு செய்பவர்தான் அல்லாஹ்வின் சன்னிதியில் செல்ல முடியும். உடலாலும், உள்ளத்தாலும், செல்வத்தாலும்

மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.'' (சிரீ ராக். முதல் மஹல்லா. பக்கம் 25,26)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுய கவுரவத்தை நிலைநாட்டிய அதே நேரத்தில் தொண்டு செய்வதைப் பற்றியும், தேவை உடைய மக்களின் தேவையை முழுமை செய்வதைப் பற்றியும் எந்த அளவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்கள் என்றால், மார்க்கங்களை நான் படித்த வரை மனிதனுக்குத் தொண்டு செய்வது பற்றிய குறிப்பு இந்த அளவுக்கு கடுமையாகவும், இந்த அளவுக்கு அதிகமாகவும் வேறு எங்கேயும், எந்த மார்க்கத்திலும் கிடைக்கவில்லை. இதை நான் ஒப்பிட்டுக் கூறுவதற்காகக் குறிப்பிடவில்லை. மாறாக, இது ஓர் உண்மையாகும். அதை நான் உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றேன்.

எவருக்கு மனித குலத்திற்குத் தொண்டு செய்வதற்கான ஆர்வம் இருக்கிறதோ அவர் தனது மார்க்கத்தை மட்டுமின்றி திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் ஆகியவற்றையும் படிக்க வேண்டும். தனக்குப் பிடித்தமான பல கருவூலங்கள் அங்கு அவருக்குக் கிடைக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மற்றும் இறையடியாரின் தொடர்பு பற்றி மிகவும் அழகான உதாரணங்களுடன் நமக்கு முன்னால் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மறுமை நாளில் இறைவன் தனது ஓர் அடியானிடம் கோபத்தை வெளிப்படுத்துவான். நான் உன்னை விரும்பவில்லை என்று கூறுவான். அதற்கு அடியான் ஏன் எனக் கேட்பான். அப்போது இறைவன், நான் பசியுடன் இருந்தேன். நான் உன்னிடம் வந்தேன். நீ எனக்கு உணவளிக்கவில்லை; நான் தாகித்தவனாக இருந்தேன். நீ எனக்கு தண்ணீர் தரவில்லை; எனது உடலின் ஆடை கிழிந்திருந்தது. நீ எனக்கு எதுவும் அணியத் தரவில்லை; நான் மேற்கூரையின்றி இருந்தேன். நீ எனக்கு தங்குவதற்கு எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்று பதில் கூறுவான்.

அந்த அடியார் இறைவனிடம், அனைத்து உலகங்களின் இறைவனே! உனக்கு என்ன தேவை இருந்தது? நீதான் எல்லா உலகங்களின் எஜமானன் ஆவாயே! எல்லாருக்கும் உணவளிக்கிறாயே! எல்லாருக்கும் தண்ணீர் வழங்குகிறாயே! எல்லாருக்கும் ஆடை அணிவிக்கிறாயே! எல்லாருக்கும் அமைதிக்கான இடங்களை வழங்குகிறாயே! நீ என்ன கூறுகிறாய் என்று கேட்பார்.

அப்போது அல்லாஹ் கூறுவான்: பார்! எனது ஏழை அடியார் பசியுடன் இருந்தபோது நான் பசியுடன் இருந்தேன். நீ உனது வயிற்றை நிரப்பினாய். ஆனால், ஏழையின் காலியான

வயிற்றைப் பொருட்படுத்தவில்லை என்றால் என்னைப் பொருட்படுத்தவில்லை. எனது ஏழை அடியார் ஆடையின்றி இருந்தார். நீ அவரது உடலை மறைப்பதற்கு முயற்சி செய்யவில்லை என்றால், எனக்கு ஆடை அணிவிக்கவில்லை. எனது ஏழை அடியார் தாகத்துடன் இருந்தார். நீ அவருடைய தாக்கத்தைத் தணிக்கவில்லை என்றால், எனது தாகத்தை தணிக்கவில்லை. அவர் வீடு இல்லாமல் இருந்தபோது அவருக்கு தலையை மறைக்க இடமளிப்பதற்கு முயற்சி செய்யவில்லை என்றால், எனக்காக முயற்சி செய்யவில்லை.'' (முஸ்லிம். கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலதி வல்ஆதாப், பாபு ஃபஸ்லி இயாததில் மரீஸ்)

ஆக, இறைவனுக்கு தனது ஏழை அடியாருடன் இப்படிப்பட்ட தொடர்பு உள்ளது. இது இஸ்லாத்தின் போதனையாகும்.

இந்தப் போதனையின் அடிப்படையில் இறைவனின் ஏழை அடியார்களிடமிருந்து எவர் தனது தொடர்பைத் துண்டித்துக் கொள்கிறாரோ, அவரிடமிருந்து அல்லாஹ் தொடர்பைத் துண்டித்துக் கொள்கிறான்.

ஆக, எனது சொற்பொழிவின் முதல் பகுதி, எவர்கள் இறைவனின் அடியார்களுக்குத் துன்பம் அளிக்கின்றார்களோ, அவர்களுக்குத் துக்கத்தைக் கொடுக்கின்றார்களோ அவர்கள் இறைவனுக்குரியவர்களாக ஒருபோதும் ஆக

முடியாது என்பதாகும். இரண்டாம் பகுதி, எவர்கள் இறைவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபடுவதில்லையோ அவர்கள் அல்லாஹ்வின் அன்பை ஒருபோதும் பெற முடியாது என்பதாகும்.

இந்து மார்க்கத்திலும் இந்தத் தலைப்பில் இதே மாதிரியான போதனைகள் இருக்கின்றன. இரண்டு, மூன்று மாதிரிகளை நான் உங்களுக்கு முன்னால் வைக்கின்றேன்.

பகவத் கீதையில் இவ்வாறு வருகிறது:

''அர்ஜுனா! எந்த மனிதன் எல்லா படைப்பினங்களையும் எவ்வித வித்தியாசமும் இன்றி ஒரே மாதிரியாகக் கருதுகிறானோ, அவர்களுடைய சுகத்தைத் தனது சுகத்தைப் போன்றும் அவர்களது துக்கத்தைத் தனது துக்கத்தைப் போன்றும் உணர்கின்றானோ அந்த மனிதன் அனைவரையும் விட அதிக உயர்ந்த இறைஞானம் கொண்டவனாக கருதப்படுகிறான்.'' (பகவத் கீதை அத்தியாயம் எண் 6 சுலோகம் 34)

பிறகு, இன்னோரிடத்தில் இவ்வாறு வருகிறது:

''எந்த மனிதன் யாரிடமும் பொறாமையும், பகைமையும் கொள்ளாமல் நட்பு வைக்கிறானோ, எவன், மகிழ்ச்சியையும் கவலையையும் துக்கத்தையும் சுகத்தையும் ஒன்றாகக் கருதுகிறோனோ, எவன் படைப்பினங்கள் அனைத்துடனும் அனுதாபத்தோடும் அன்போடும்

நடந்து கொள்கிறானோ, அனைவர் மீதும் கருணை காட்டுகிறானோ, ஆணவம், தன்னலம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவனாக உள்ளானோ, மன்னிக்கக் கூடியவனாக இருக்கிறானோ, எப்போதும் உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்பவனாகவும், பொறுமை செய்பவனாகவும், நன்றி செலுத்துபவனாகவும், மனதை அடக்கக் கூடியவனாகவும் நிரந்தரமாக உள்ளத்தாலும் சிந்தனையாலும் பரமேசுவரனாகிய என்னுடன் இணைந்திருப்பானோ அப்படிப்பட்ட பக்தனே எனக்கு அன்பிற்குரியவன் ஆவான்.'' (பகவத் கீதை அத்தியாயம் 12 சுலோகம் 13)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

``அனைவரையும் விட அதிகமாக நல்லொழுக்கங்களைக் கொண்டவர்கள் மறுமை நாளில் உங்களில் அனைவரையும் விட எனக்கு மிகவும் அன்பிற்குரியவர்களாகவும், எனக்கு மிகவும் அருகில் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். வாய் கிழிய அதிகமாகப் பேசுபவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் ஆணவத்துடன் திரிபவர்கள் ஆகியோர் எனக்கு மிகவும் வெறுப்பிற்குரியவர்களாக இருப்பார்கள்.'' (திர்மிதீ, கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா, பாபு மாஜாஅ ஃபீ மஆலில் அக்லாக்)

இந்தக் கருத்து பற்றிய மிகவும் அழகிய போதனைகள் நமக்கு பகவத் கீதையிலும் கிடைக்கின்றன. அவ்வாறே, வேதங்களிலும் மிகவும் தூய்மையான போதனைகளின் முன்மாதிரிகள் காணப்படுகின்றன. அந்த எல்லா போதனைகளையும் படித்து, நமக்கு ஒரே இறைவன்தான் இருக்கிறான்; ஒவ்வொரு மார்க்கத்தின் ஆரம்பத்திலும் சான்றோர்களுக்கு அந்த ஓரிறைவனே வெளிப்பட்டான் என்ற உறுதியால் மனிதனுடைய உள்ளம் நிரம்பி விடுகின்றது. அந்த இறைவன் மீது நாம் நேசம் கொள்கின்றோம் என்றால் நாம் ஒருவர் மற்றவருக்கிடையிலான நேசத்தை அதிகமாக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் பாபா குருநானக் அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

''பாபா நானக் ஒரு தூய சான்றோராக இருந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. இறைவன் தனது அன்பின் பானத்தை அருந்தக் கொடுத்த மக்களில் ஒருவராக அவர் இருந்தார்.'' (பைகாமே ஸுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 445)

பிறகு அவர்கள் கூறுகிறார்கள்:

''எவர் அவரை விட்டு விலகி இருக்கிறாரோ அவரை விட்டு இறைவன் விலகி

இருக்கிறான்.'' (சத் பச்சன். ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 161)

''(பாபாநானக்) அவர்கள் மற்றும் அவருடைய தூய போதனைகள் மூலமாக சிறிது பயனடைந்திருந்தாலும் இன்று இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாகி இருப்பார்கள். அந்தோ! ஒரு நல்ல மனிதர் உலகில் வந்தார்; சென்றும் விட்டார். ஆனால் அறிவிலிகள் அவரிடமிருந்து எந்த ஒளியையும் பெறவில்லையே என்று எண்ணும்போது அழுகை வருகிறது.'' (பைகாமே ஸுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 446)

குருநானக் அவர்களின் ஆடையைப் பற்றிக் கூறுகிறார்கள்:

''இந்த தூய சட்டையே சீக்கியர்களின் கிரீடமாகும். இந்த மேலாடை இப்போது காபுலி மல்லின் வீட்டில் உள்ளது.

இதுவே ஒளிகளினால் நிரம்பி காணப்படுகிறது. இதை விட்டும் தூர விலகி இருப்பவர் இறைவனை விட்டும் விலகி இருக்கிறார்.

இதுவே ஜனம் சாக்கீயில் கூறப்பட்டுள்ளது. இதுவே இப்போது மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது.

இதிலேயே தெளிவான இறைவசனங்கள் இருக்கின்றன. இவற்றிலிருந்து நிரந்தரமான வாழ்வு கிடைக்கும்.

நானக் அவர்களுக்கு இந்த ஆடை அருளாகக் கிடைத்தது. இறைவனிடமிருந்து கிடைக்கப்பெற்றது வலி நிவாரணியாக இருந்தது.

இதிலிருந்தே உண்மையின் எல்லா இரகசியங்களும் அவருக்குக் கிடைத்து விட்டன. அதன் மூலமாகவே அவர் உண்மையின் பக்கம் வந்துவிட்டார்.'' (சத் பச்சன். ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 161)

ஹஸ்ரத் கிருஷ்ணர் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதுகிறார்கள்:

**''ஒருமுறை நாம் கிருஷ்ணரைப் பார்த்தோம். அவர் கருப்பு நிறமாக இருந்தார். சிறிய மூக்குடையவராகவும் அகலமான நெற்றியுடையவராகவும் இருந்தார். கிருஷ்ணர் எழுந்து தனது மூக்கை நமது மூக்குடனும் தனது நெற்றியை நமது நெற்றியுடனும் சேர்த்து இணைத்துக் கொண்டார்.''** (அல்ஹகம். தொகுதி எண்: 12, எண் 17, 6 மார்ச் 1908 பக்கம் 7 மற்றும் தஸ்கிரா பக்கம் 381. ரப்வா வெளியீடு 1969)

ஒருவர் சந்திக்கும்போது மூக்கை மூக்குடனும் நெற்றியை நெற்றியுடனும் ஏன் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற இந்த விஷயம் இன்று உங்களுக்கு மிகவும் வியப்பிற்குரியதாக இருக்கும். நான் நியூஸிலாந்து செல்லாமல் இருந்திருந்தால் எனக்கும் இதன் இரகசியம்

வெளிப்பட்டிருக்காது. நான் நியூஸிலாந்து சென்றபோது அங்கு ஒரு பழங்குடி இனம் வசிக்கின்றது. மனித நாகரிகத்திற்கும் முன்னர் அங்கு குடியிருக்கின்றது. அவர்கள் தமது பழைய மரபுகளை உயிரோட்டத்துடன் வைத்துள்ளனர். **அதன் தலைவர் தனது அன்பு, ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் என்னைக் கட்டித் தழுவியவாறு என்னுடைய மூக்குடன் தனது மூக்கை இணைத்து விட்டார். மேலும் நெற்றியை நெற்றியுடன் இணைத்து விட்டார். அப்போது அதன் மூலமாக எனக்கு இரண்டு விஷயங்கள் புலப்பட்டன.** புலப்பட்டது ஒன்றுதான். ஆனால் அதன் விளைவாக இன்னொரு பயனும் கிடைத்தது.

புலப்பட்டது என்னவெனில், பழைய சமுதாயங்களின் நாகரிகத்திலிருந்து நான் கண்ட ஒரு காட்சியைப் போன்ற இந்தப் பழக்கம்தான் நிச்சயமாக அந்தக் காலத்தில் இருந்திருக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கஷ்ஃபில் தென்படுகின்ற கிருஷ்ணர் அப்படிபட்ட ஒருவர்தான்.

இரண்டாவது, இன்னோர் இரசியம் தெரிந்தது. அதாவது, இந்த இடங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையின் விஷயங்களில் மிகவும் வலுவான சான்றுகள் இருக்கின்றன. இல்லையென்றால் இந்தியாவில் வளர்ந்த ஒரு மனிதர் தன் சார்பாக ஒன்றை உருவாக்குகின்றார் என்றால் ஆன்மீகக்

காட்சியில் ஒரு சான்றோரைக் காண்பதும் அவர் கட்டித் தழுவதற்கு பதிலாக, காலைத் தொடச் சொல்வதற்கு பதிலாக அல்லது காலைத் தொடுவதற்கு பதிலாக மூக்குடன் மூக்கைச் சேர்ப்பதும், நெற்றியுடன் நெற்றியை இணைக்கவும் கூடிய செயல்களையெல்லாம் நினைத்துப் பார்க்கவும் முடியாது. கிருஷ்ணர் இருந்த காலத்தில் சமுதாயங்களில் அன்பை வெளிப்படுத்தும் முறை, ஒற்றுமையை வெளிப்படுத்தும் முறை இப்படித்தான் இருந்தது. இதெல்லாம் மறைவானவற்றை அறிபவனாகிய ஏக இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வெளிப்படுத்தி இருக்கிறான்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''எனக்கு வெளிப்படுத்தியபடி ராஜா கிருஷ்ணர் உண்மையில் முழுமையான மனிதராக இருந்தார். அவருக்கு நிகரானவர் இந்துக்களின் எந்த ரிஷிகளிடமும், அவதாரங்களிடமும் காணப்படுவதில்லை. அவர் தனது காலத்தில் அவதாரமாக, அதாவது, நபியாக இருந்தார். அவர் மீது இறைவன் புறமிருந்து பரிசுத்த ஆவி இறங்கி வந்தது. அவர் இறைவன் புறமிருந்துள்ள வெற்றியாளரும், கம்பீரமானவரும் ஆவார். அவர் ஆரியர்களின் பூமியை பாவத்திலிருந்து தூய்மையாக்கினார். உண்மையில் அவர் தமது

காலத்தின் நபியாக இருந்தார். பின்னால் அவருடைய போதனையில் பல விஷயங்களில் சீர்குலைவு உருவாக்கப்பட்டுள்ளது. அவர் இறையன்பினால் நிரம்பி இருந்தார். மேலும் நன்மையை நேசித்தும், தீமையை வெறுத்தும் வந்தார்.'' (லெக்சர் சியால்கோட். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 228,229)

ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் கிருஷ்ணரைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதற்கான சான்று கொடுத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

''ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பிற நாடுகளின் நபிமார்களைப் பற்றிக் கேட்கப்பட்டது. அப்போது அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இறைவனின் நபி வந்து சென்றுள்ளனர். மேலும், இவ்வாறு கூறினார்கள்:

كَانَ فِى الْهِنْدِ نَبِيًّا اَسْوَدَاللَّوْنِ اِسْمُهٗ كَاهِنًا

அதாவது, **இந்தியாவில் ஒரு நபி தோன்றினார். அவர் கருமை நிறத்தவர் ஆவார். அவர் பெயர் காஹின் (அதாவது, கண்ணன்) என்பதாகும். அவரை கிருஷ்ணர் என்று அழைக்கின்றனர்.''** (i. தாரீ(க்)கே ஹம்தான் தைலமி பாபுல் காஃப். ii. தஸ்தூருல் உலமாயி அல் ஜாமிவுல் உலூமி ஃபீ இஸ்திலாஹா(த்)தில்

ஃபுனூன், முஅல்லிஃபா அல்காஸீ அப்துன் நபி பின் அப்திர் ரஸூலில் அஹ்மதநகரி, பக்கம் 81)

இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை கலியுகத்தின் அவதாரமாக ஆக்கினான். மேலும், அன்னார் மீது இந்தப் புதிய வஹியை இறக்கினான்:

''தீமையை அழிப்பவரே! நல்லவர்களை வளர்ப்பவரே! உம்முடைய புகழ் கீதையில் எழுதப்பட்டுள்ளது.'' (துஹ்ஃபயே கோலட்விய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 315, தஸ்கிரா பக்கம் 311 காதியான் பதிப்பு 2006)

பிறிதோர் இடத்தில் இதே இல்ஹாம் இந்தச் சொற்களில் வந்தது:

"தீமையை அழிக்கின்ற, நன்மையைக் காக்கின்ற கிருஷ்ணரே! உமது புகழ் கீதையில் எழுதப்பட்டுள்ளது." (லெக்சர் சியால்கோட். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 229, தஸ்கிரா பக்கம் 312, காதியான் பதிப்பு 2006)

இப்போது நான் இந்த கருத்தை நிறைவு செய்வதற்கு கொண்டு சென்று இறுதியாக சில விஷயங்களை உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றேன். இந்த எல்லா மேற்கோள்களின் நோக்கம் ஒன்று மட்டும்தான். அதாவது, இந்திய பூமி பலவிதமான சமத்துவத்தின் தலைமை இடமாக மாறிக் கொண்டிருப்பதை நான் காண்கிறேன். இது எனது முதல் நாடாகும். இங்கேயே நான் பிறந்தேன்; இங்கேயே நான்

கண் திறந்தேன்; இந்த பூமியின் மண்ணிலிருந்தே எனது இருப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எந்தக் காரணத்தினால் எனக்கு இங்கிருந்து இடம் பெயர்ந்து செல்ல நேர்ந்திருந்தாலும் சரி! இந்த பூமியுடன் எனக்கு ஆழமான அன்பு இருக்கிறது.

பிறகு காதியான் கிராமத்துடன் ஒவ்வோர் அஹ்மதிக்கும் ஒரு மறையாத அன்பு இருக்கிறது. அது மறுமை வரை தொடர்ந்திருக்கும். இந்த உறவிலும் எந்த நாட்டில் தூய காதியான் கிராமம் இருக்கிறதோ அந்த நாட்டுடனும் எனக்கு அன்பு இருக்கிறது. மார்க்கமும் எனக்கு இந்த போதனையைத்தான் தந்திருக்கிறது. ஒருவர் மற்றவருடன் உள்ள அன்பை, நேசத்தை அதிகமாக்குங்கள் என்ற போதனையைத்தான் உங்களின் மார்க்கமும் உங்களுக்கு இந்த போதனையைத்தான் தந்திருக்கிறது. உலகில் அமைதியற்ற நிலைமையின் அடையாளங்களை நான் பார்க்கும்போதெல்லாம் எனது உள்ளத்திற்கு மிகவும் துன்பம் ஏற்படுகிறது. ஆனால், குறிப்பாக, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நான் அமைதியற்ற நிலையைக் காணும்போது, இங்கு மனிதர்கள் ஒருவர் மற்றவர்களுடன் சண்டை போடுவதைக் காணும்போது, அல்லது நாடுகள் இன்னொரு நாடுகளுடன் வெறுப்பு கொள்வதைக் காணும்போது, தூர விலகிச் செல்வதைக் காணும்போது எனது உள்ளம் துக்கமடைகின்றது. மிகவும் அதிகமாக துன்பத்தை உணர்கின்றேன். மேலும், எதிர்காலத்தைப் பற்றி எத்தகைய

அபாயங்களைப் பார்க்கின்றேன் என்றால், அவை பற்றிய ஞானம் உங்களுக்கு உருவாகி விட்டால் நீங்கள் உருகி விடுவீர்கள். மிகவும் பயங்கரமான நாட்கள் நமக்கு முன்னால் வரவிருக்கின்றன.

எனவே, நான் உங்களுடைய புனித நூல்களிலிருந்து சான்று காட்டி உங்களுக்கு அறிவுரை வழங்குகிறேன். மேலும், எங்களின் தூய வேத நூலைச் சான்றாகக் காட்டி அஹ்மதிகளுக்கும் எல்லா முஸ்லிம்களுக்கும் அறிவுரை கூறுகிறேன். நேரம் இருக்கிறது. சீக்கிரம் ஒருவர் மற்றவருடன் அன்பான தொடர்பை உருவாக்கிக் கொள்ளுங்கள்; வெறுப்பை நிரந்தரமாக வழியனுப்பி விடுங்கள். இல்லையென்றால் நீங்கள் இந்த உலகில் வாழ்வியல் நெறிகளை விட்டும் வெகு தொலைவிற்கு சென்று விடுவீர்கள். நான் துவக்கத்தில் குறிப்பிட்ட புரட்சிகள் உருவாகி விட்டன. அதன் விளைவாக மேற்கத்திய சக்திகள் ஒரு புதிய வல்லமையுடன் புதிய உறுதியுடன் உலகத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றன. எப்படிப்பட்ட உறுதிப்பாட்டுடன் அவை உலகத்தை கைப்பற்றக் கூடியவை என்றால், அதற்குப் பிறகு அவற்றிலிருந்து எவ்வாறு விடுதலை பெறுவது என்பதைப் பற்றி பலவீனமான நாடுகளின் சிந்தனையிலும் வர முடியாது. இந்த சக்திகள் பொது மக்களின் பண்பின் முழு வெளிப்பாடாக இருக்குமோ இல்லையோ ஆனால் மேற்கத்திய அரசியல்

என்ற முறையில் இவ்வாறே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த வழிகளையே கொண்டிருக்கிறது.

**ஏனெனில், துரதிஷ்டவசமாக இந்த அரசியலின் கடிவாளம் இன்று அமெரிக்காவின் கையில் இருக்கிறது.** மேலும், அமெரிக்கா அகம்பாவத்தின் இறுதி எல்லையை அடைந்து விட்டது. அதற்குப் பிறகு வீழ்ச்சியின் ஆரம்பம் துவங்கி விடுகிறது. ஆனால் அந்த மகத்தான மாற்றங்கள் உலகில் தோன்றுவதற்கு முன்னர் நாம் பலவிதமான கஷ்டங்களைக் கடந்து செல்ல வேண்டியதிருக்கிறது; பல சோதனைகளை கடந்து செல்ல வேண்டியதிருக்கிறது.

**நாம் நமது நாடுகளில் அமைதியை நிலைநாட்டவில்லை எனில், ஏழை சமுதாயங்கள் மற்ற ஏழை சமுதாயங்களுடன் அமர்ந்து தமது வாழ்வுக்கான வழிவகைகளை உருவாக்காவிடில், நாம் நாளுக்கு நாள் பலவீனமானவர்களாகவும் மோசமானவர்களாகவும் ஆகிக் கொண்டே செல்வோம். அதன் விளைவாக வெளிப்படையாக அடிமைத்தனம் எனும் சங்கிலியில் நிரந்தரமாக பிணைக்கப்படுவோம். அதிலிருந்து எவ்வித விடுதலையையும் பெற முடியாது.**

அல்லாஹ்வின் நியதி இந்த அடிமைத்-தனத்தின் போரை அழித்தால் அன்றி அதிலிருந்து எவ்வித விடுதலையையும் பெற முடியாது. அதிலிருந்து வெளிப்படையில் உலகம் விலகி இருக்கிறது. **ஆனால் ஒருபோதும்**

**பின்னால் விலகவில்லை என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். மாறாக, ரஷ்யாவில் ஏற்பட்ட இந்த புரட்சிக்குப் பிறகு, பெர்லின் சுவர் இடிந்த பிறகு உலகம் போருக்கு மேலும் அதிகமாக நெருங்கி விட்டது. வருங்காலத்தில் உலக அமைதிக்குக் கடுமையான அபாயங்கள் இருக்கின்றன.** இதற்கு முன்னர் இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் உலகிற்கு எச்சரிக்கை செய்தனர். இந்த காதியானிலிருந்தே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த அதே எச்சரிக்கையை நான் உங்களுக்கு முன்னால் திரும்ப எடுத்துக் கூறுகிறேன்.

உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதை தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். இறைவனுக்காக உங்கள் மன இச்சையை அழித்து விடுங்கள். மனித குலத்திற்கு அன்பை போதியுங்கள். ஒருவர் மற்றவருடன் அன்புடன் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். இல்லையென்றால், உங்களின் கண்ணியத்திற்குரிய வாழ்க்கைக்கு எந்த உத்தரவாதமும் வழங்கப்பட முடியாது.

இப்போது பாருங்கள்! ஏழை நாடுகளான நமது பட்ஜெட் அதிகமாக நாட்டின் பாதுகாப்பிற்கே செலவாகிக் கொண்டிருக்கிறது. தற்காப்பு யாருக்கு எதிராக? இன்னோர் ஏழை நாட்டிற்கு எதிராக. மேலும், அந்த ஓர் ஏழை நாடு தனது பட்ஜெட்டின் அதிகமான பகுதியை தனது தற்காப்புக்காக ஆயத்தம் செய்கிறது.

மேலும் அபாயம் ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட நிம்மதியற்ற நிலையில் உங்கள் பொது மக்கள் எப்படி வாழ்வின் நாட்களைக் கழிக்க முடியும்? எந்த சமுதாயத்தின் பெரும்பான்மையான செல்வம் ஒருவர் மற்றவரின் இரத்தத்தை உறிஞ்சுவதற்காக, ஆயுதங்களை வாங்குவதில் செலவாகி விடுமோ அந்த சமுதாயத்தின் ஏழை பொது மக்களுக்கு யார் இரத்தம் கொடுப்பார்?

எனவே போர்கள் நடைபெற்றால் ஏழைகளின் இரத்தம்தான் மீண்டும் போர்களில் வீணடிக்கப்படும். இது ஒளிவு மறைவு ஏதுமில்லாத தெளிவான விஷயமாகும். இதை இன்று சமுதாயங்கள் ஏன் புரிவதில்லை? இதை இன்று ஏன் சமுதாயங்களின் தலைவர்கள் பார்ப்பதில்லை?

எனவே நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். அப்படிச் செய்யவில்லை என்றால் மிகவும் அசுத்தமான, பயங்கரமான நாட்கள் வரவிருக்கின்றன. அதன் விளக்கத்திற்கு செல்வதற்குச் நேரமில்லை. ஏற்கனவே அதிக நேரம் ஆகி விட்டது.

எனவே நான் எனது கவிதையில் கடைசி வரிக்கு முந்தைய வரியில் கூறிய கருத்து, அது நமது இரண்டு சமுதாயங்களையும் ஒன்று சேர்ப்பதற்கான, ஒரே இறைவன் பக்கம் குனிய வைப்பதற்கான மிகச் சிறந்த முழக்கமாகும். அது

‘வாஹே குரு அல்லாஹு அக்பர்’ என்பதாகும். இந்த முழக்கங்கள், முழக்கங்களாக மட்டும் இல்லாமல் உண்மையிலேயே நமது உள்ளங்கள் ஒரே இறைவனின் அன்பில் எப்போதும் பிணைக்கப்படட்டுமாக!

இப்போது நான் உங்களிடமிருந்து அனுமதி பெறுவேன். நேரம் அதிகமாகி விட்டது. செல்வதற்கு முன்னர் துஆவுக்காக சில விஷயங்களை உங்கள் முன்னால் வைக்க நாடுகிறேன். அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அதற்கு காதியானுடன் ஓர் ஆழமான அன்பு இருக்கிறது. ஒருவேளை நமது எஜமானர் காதியானுக்கு செல்வது இந்தியாவின் அரசாங்கத்திற்கு அல்லது காதியானில் வாழ்பவர்களுக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம் என்ற சிந்தனையை - குறிப்பாக பாகிஸ்தானின் மக்கள் ஒரு நீண்ட காலமாக தமது உள்ளத்தில் உறுதியாக பதித்து விட்டார்கள். ஒருவேளை இந்த ஒரு காரணத்தினால்தான் என்னவோ! அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலோ, இந்தியா பாக். பிரிவினைக்குப் பிறகு எந்த கலீஃபாவுக்கும் இங்கு வருவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. நான் வருவதற்குத் தீர்மானித்தபோது அதிகமாக துஆக்களை செய்தேன். அதிகமாக இஸ்திகாரா செய்ய கூறினேன். **நீர் காதியான் செல்வது இறைவனின் திருப்திக்கும் நாட்டத்திற்கும் ஏற்ப இருக்கும்;**

**மேலும் அதில் நன்மையும், அருளும் இருக்கும் என்பதன் பக்கம் அதிகமாக முழு உலகத்திலிருந்தும் இறைவனின் விரல் சுட்டிக் காட்டியவாறு தென்பட்டது.** எல்லா உலகின் நன்மை இதிலேயே இருக்கிறது; மேலும் அதன் விளைவாக தூய புரட்சிகள் உருவாகும் எனத் தெரிய வந்தது.

அந்த ஆன்மீகக் காட்சிகளை நான் தனி கோப்பில் பாதுகாத்து வைக்குமாறு கூறி இருக்கிறேன். அதை நீங்கள் படித்தால் உலகில் பல்வேறு நாடுகளிலுள்ள அஹ்மதிகளுக்கு இந்த அருளுக்குரிய பயணத்தைப் பற்றி அல்லாஹ் எவ்வாறு உறுதியளித்துள்ளான் என வியந்து விடுவீர்கள். மேலும், இது இறைவனுடைய விருப்பத்திற்கு ஏற்றதாகும்; மேலும் அருளுக்குக் காரணமாக அமையும் எனக் கூறியுள்ளான். மேலும் எனக்கு மனநிறைவை அளிப்பதற்குச் சில செய்திகளை எவ்வளவு விபரமாக வழங்கினான் என்றால், அதனால் எனது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. மேலும் ஆன்மா சஜ்தாவில் வீழ்ந்து விட்டது. சில நேரத்தில் சின்ன விஷயமாக இருக்கிறது. ஆனால் அதன் மூலமாக மனிதனுக்கு முழுமையான உறுதி ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ் மிகவும் அன்புடனும், நுண்ணிய பார்வையுடனும் நம்மைப் பார்க்கிறான் என்ற முழுமையான உறுதி ஏற்பட்டு விடுகிறது. நான் உம்முடன் இருக்கின்றேன்; முன்னேறிச் செல்வீராக. உமக்காக நியமிக்கப்பட்ட

அருள்களைப் பெற்றுக் கொள்வீராக என்ற உறுதியை வழங்க விரும்புகிறான்.

ஒருமுறை இலண்டனில் நாங்கள் அமர்ந்து கொண்டு, குழந்தைகள் அங்கு எப்படிச் செல்வார்கள் என்று பேசிக் கொண்டிருந்தோம். எனது மகள் வழிப்பேரன் ஒரு இராணுவ உடை அணிந்து கொண்டிருந்தான். அவன் மிகச் சிறிய பேரன். அவனுக்கு, தான் இராணுவ ஆடையில் இந்தியா செல்ல வேண்டும் என்று மிகவும் அதிக ஆசை இருந்தது. அதற்கு அவருடைய தாயார், 'இது பாகிஸ்தானிய இராணுவ உடை ஆகும். இவன் எந்த எண்ணத்தில் வந்திருக்கின்றான் என அவர்கள் என்ன நினைப்பார்களோ!' என்றார்.

நான் கூறினேன்: இவன் இரண்டு, இரண்டரை வயது சிறுவன் ஆவான். அவர்கள் என்ன நினைக்கப் போகிறார்கள்? அவர்கள் நல்ல புரியும் திறன் கொண்டவர்கள். சிறுவனின் ஆசையை நிறைவேற விடுங்கள் என்றேன். கருத்து வேறுபாடு அதிகமானபோது எனக்கு அஹ்மதி சிறுவர்கள் இராணுவ உடையில் இருப்பது அதிக விருப்பமாகும் என தீர்மானித்தேன். அதாவது, காதியான் செல்வதற்கு பொதுவான ஆடையை விட இராணுவ ஆடை அதிக விருப்பமானதாகும். நான் கீழே அலுவலகம் சென்றபோது தபாலில் வந்த ஒரு கடிதம் கிடைத்தது. அதில், நான் இஸ்திகாரா செய்தேன். இந்தியாவின் மாநாட்டிற்கு செல்லும்

போது சிறுமிகளுக்கு பொதுவான ஆடைகளும், சிறுவர்களுக்கு இராணுவ ஆடைகளும் உங்களுக்கு விருப்பமாக இருக்கும் என்ற காட்சியை எனக்கு அல்லாஹ் காட்டிக் தந்திருக்கிறான் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போது கூறுங்கள்! எந்த சக்தி இவ்வளவு தொலை தூரத்திலுள்ள அந்நிய நாட்டிலிருந்த ஓர் அஹ்மதிக்கு இந்தக் காட்சியைக் காட்டியது! நேரமும் எவ்வளவு துல்லியமாக இருந்ததென்றால், மேலே நான் பேசிவிட்டு கீழே இறங்கிக் கொண்டிருக்கிறேன். அப்போது எனக்கு முன்னால் அந்தக் கடிதம் கிடக்கின்றது. அதில் எங்களுக்கு மத்தியில் நடந்த உரையாடல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இறைவன் மிகவும் நுட்பமான முறையில் எனது தைரியத்தை அதிகமாக்கினான். இறைவனின் நியதிதான் உம்மை அங்கு கொண்டு செல்கின்றது என்ற உறுதியை வழங்கினான்.

இப்போது இன்னொரு சம்பவத்தைக் கேளுங்கள். அங்கு நமது ஒரு நண்பர் சீனாவைச் சேர்ந்த உஸ்மான் சாஹிப் அவர்கள் இருக்கின்றார்கள். திருக்குர்ஆனை அவர்கள் சீன மொழியில் மொழியாக்கம் செய்திருக்கிறார்கள். அவர் சிறு வயதில் எனது வகுப்புத் தோழரும் ஆவார். மிகவும் தூயவரும் துஆ செய்பவரும் ஆவார். அவருக்கும் நான் இஸ்திகாரவுக்காக எழுதினேன். அவருடைய அற்புதமான பதில் வந்தது. அவர் கூறினார். நான் ஆன்மீகக்

கனவில் கண்டேன். உங்களுடன் உங்கள் வீட்டைச் சேர்ந்த ஏறக்குறைய பன்னிரண்டு, பதினான்கு பேர் இருக்கின்றீர்கள். எந்த வீட்டில் உங்களைத் தங்க வைக்க வேண்டுமோ அங்கிருந்து இரண்டு வீடுகளை காலி செய்வதா, வேண்டாமா என்பது பற்றி யோசிக்கப்படுகிறது. அப்போது நான், குடும்பத்திலுள்ள நபர்கள் அதிகமாக இருக்கிறார்கள்; எனவே இரண்டு வீடுகளை காலி செய்ய வைப்பதுதான் நல்லது எனக் கூறுகிறேன். அவருடைய இந்த ஆன்மீகக் கனவு எனக்குக் கிடைத்தது.

அங்கு காதியானிலிருந்து, உங்களைத் தங்க வைக்க வேண்டிய இடமாகிய உம்மே தாஹிர் வீட்டில் இன்னும் இரண்டு தர்வேஷ்களின் குடும்பங்கள் இப்போதும் இருக்கின்றன. தங்களுக்கு முழுமையான வசதிகள் கிடைக்கும் வகையில் அவர்களை அங்கிருந்து வேறு ஓர் இடத்திற்கு மாற்றி விடலாம் என நாங்கள் தீர்மானித்திருக்கிறோம் என்ற தகவல் கிடைத்தது. நான் அவர்களுக்கு எழுதினேன். இந்த பதிலை எழுதிய பிறகு எனக்கு ஆன்மீகக் கனவு பற்றிய கடிதம் கிடைத்தது. நீங்கள் இவ்வாறு தர்வேஷ்களுக்கு துன்பம் கொடுப்பதை நான் விரும்பவில்லை. அவர்கள் முழு மனதுடன், சிறிதளவும் தயக்கம் இன்றி தாமாகவே வீட்டை காலி செய்து தர விரும்புகிறார்கள் என நீங்கள் எனக்கு உறுதி அளிக்காத வரை அவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டாம் என நான்

அவர்களுக்கு பதில் எழுதிக் கொண்டிருந்தேன். இந்தக் கடிதத்தை நான் எழுத வைத்து முடித்த பிறகு உஸ்மான் சீனி சாஹிப் அவர்களின் கடிதம் கிடைத்தது. உனது தீர்மானம் சரியானது என இறைநியதியும் எனக்குக் கூறுகிறது என எனக்கு இதிலிருந்து உறுதி ஏற்பட்டு விட்டது. ஆயினும் நான் விரும்புவதே நடக்கும் (என அல்லாஹ் கூறுவதும் உறுதியாகிறது). அந்த தர்வேஷ்கள் மிகவும் அன்புடனும் ஆர்வத்துடனும் எங்களுக்கு எந்தத் துன்பமும் இல்லை; ஒருவேளை எங்களுக்கு வேறு வீடு, இதை விட நல்லதாக இருக்கலாம்; எனவே எங்களை அகற்றி விடுங்கள் எனக் கூறுவதாக தொலைநகல் (fax) கிடைத்தது.

10, 12 என்பதைப் பொருத்தவரை எனது குழந்தைகள் மற்றும் அவர்களது குழந்தைகள் எல்லாம் சேர்த்து 12 பேர் என்னுடன் வந்துள்ளனர். மேலும், ஜமாஅத்தின் பிரதிநிதித்துவத்தில் நானும் எனது மனைவியும் ஆக (மொத்தம்) 14 பேர் ஆகிறோம். ஜமாஅத்தின் பிரதிநிதித்துவத்தில் நாங்கள் இருவர் மட்டும் செல்வோம்; மற்றவர்களைச் சொந்தமாக உடன் அழைத்துச் செல்வோம் என இந்த வித்தியாசத்தையும் நான்தான் செய்தேன். எனவே பன்னிரண்டு அல்லது பதினான்கு என்ற இந்த வித்தியாசத்துடனேயே அல்லாஹ்வும் அவருக்கு ஆன்மீகக் கனவில் காட்சியைக் காட்டினான். மேலும் அவர்களுக்கு சற்று

விரிவான இடம் தேவைப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினான். இப்போது கூறுங்கள். இறைவனுடன் தொடர்பு இல்லை என்றால், இறைவன் நம் மீது அன்பான பார்வை செலுத்தவில்லை என்றால் நமது விவகாரத்தில் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறான்? இனி நடக்கவிருக்கும் செய்திகளைப் பற்றி நேரத்திற்கு முன் நமக்கு ஏன் அறிவிக்கின்றான்?

இறைவனுடன் தொடர்புள்ள இந்த இயக்கம் இந்த காதியான் நகரத்திலிருந்தே இன்றிலிருந்து ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். **இந்த நகரத்திற்குத்தான் நாம் எப்போதும் நன்றி உணர்வுள்ளவர்களாக இருப்போம். ஏனெனில் இந்த நகரத்தின் வழியினால் நாம் மக்கா மதீனாவுடன் இணைக்கப்பட்டோம். 1400 ஆண்டு இடைவெளி இருந்தபோதிலும், ஆகரீன் (பின் தோன்றியவர்கள்) ஆக இருந்தபோதிலும் இந்த நகரத்தின் வழியிலேயே நாம் முன்னவர்களுடன் இணைந்தோம்.**

எனவே, இந்த நகரத்தின் பேருதவி நமது உள்ளத்தில் எப்போதும் இருக்கும். ஆனால், பேருதவி பற்றிய பேச்சுக்கு இங்கு இடமில்லை; நாம் அதனுடைய அன்பில் சிறை பிடிக்கப்பட்டுள்ளோம். உலகில் எங்கிருந்தாலும் ஒவ்வோர் அஹ்மதியின் உள்ளத்திலும்

இயல்பாகவே காதியானுக்காக எல்லையற்ற அன்பும், நேசமும் காணப்படுகிறது.

நான் இங்கு வந்து கொண்டிருந்தபோது எனது நிலையும் எனது பிள்ளைகளின் நிலையும் இவ்வாறு தான் இருந்தது. நாங்கள் கனவுகளைக் காண்பது போன்று தோன்றியது. கனவுகளுக்கு ஏதாவது விளக்கமும் வெளிப்படுமா, வெளிப்படாதா என்பதை நாங்கள் அறியாமல் இருந்தோம். அப்போது நிலைமை உறுதியற்றதாக இருந்தது. ஆனால் கனவுகளைப் போன்ற ஒரு நிலையில் நாங்கள் நேரத்தைக் கழித்தோம். நாங்கள் இங்கு வந்தபோது கனவின் விளக்கமும் ஒரு கனவைப் போன்றே தெரிந்தது. நான் இங்கு கழித்த நேரமெல்லாம் கனவுகளுக்கு விளக்கமாக இல்லாமல் கனவாகவே கிடைத்தது. நான் எனது சில உடனிருப்பவர்களிடம் கேட்டபோது அவர்களின் நிலையும் இப்படியே இருந்தது.

இப்போது கனவும் கனவாகும் நாட்கள் வந்து கொண்டிருக்கின்றன. நான் பிரிவைப் பற்றி சிந்திக்கும்போது எனது உள்ளம் துக்கத்தால் உருகி விடுகிறது.

இந்த ஊர் எனக்கு எவ்வளவு நேசத்திற்குரியதாக உள்ளது என்றால், எவ்வளவு நேசத்திற்குரியதாக உள்ளது என்றால், எவ்வளவு நேசத்திற்குரியதாக உள்ளது என்றால், வாழ்நாள் முழுவதும் இந்த மண்ணிலேயே திரிந்தவாறு, இந்தக் காற்றையே சுவாசித்தவாறு, இந்தத் தெருக்களிலேயே நடந்தவாறு, ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அவர்களின் அன்பிற்குரியவர்களின் நினைவில் எனது வாழ்வை இங்கு கழிக்க வேண்டும் என உள்ளம் விரும்புகிறது. மேலும், இந்த நிலைமைதான் உங்கள் அனைவருடையதும் ஆகும்.

**ஆனால், கடைசியில் நாம் பிரிய வேண்டியதிருக்கிறது. ஆயினும் காதியானின் நமது இந்தப் பயணம் முதல் பயணம்தானே தவிர இறுதி பயணம் அல்ல என நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் மிகத் தெளிவான இல்ஹாம்களின் மூலமாக விபரமாக செய்திகளை தெரிவித்திருக்கிறான். அவற்றிலிருந்து நாம் அமைதியான நிலையில் காதியான் செல்ல வேண்டியது வரும் எனத் தெரிகிறது. மேலும் அவ்வாறு ஒருமுறையல்ல, இரண்டிரண்டு முறை, மும்மூன்று முறை, நான்கு நான்கு முறை நடக்கும். பிறகு கடைசியில் அல்லாஹ் காலத்தின் நிலையை எப்படி மாற்றி விடுவான் என்றால், இந்த நாடும் இதில் வாழ்பவர்களும் நம்மை எப்போதும் தமது நாட்டின் குடிமக்களாக ஏற்றுக் கொண்டு விடுவார்கள். மேலும் மிகவும் அன்புடன் நம்மை இங்கு வந்து வாழ்வதற்கு அழைப்பு விடுப்பார்கள். இதன் சில அடையாளங்களை நான் எனது நடை பயிற்சியின் போது கண்டு கொண்டேன்.

உண்மையிலேயே, ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் தாருல் அன்வாரிலிருந்து நடை பயிற்சி மேற்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது ஒரு வீட்டின் வாசலில் ஒரு சீக்கியரும் அவர் மனைவியும் நின்று கொண்டிருந்தனர். நான் அவர்களுக்கு சலாம் கூறினேன். அவர்களும் சலாம் கூறினர். மேலும், அருகில் வந்து, நீங்கள் (காதியான்) வந்து விட்டீர்கள்; இனி நீங்கள் திரும்பிச் செல்லாதீர்கள். எங்களுக்கு உங்களது தேவையுள்ளது. எப்போதும் எங்களுக்குரியவராக இருந்து இங்கு தங்கி விடுங்கள். இதை வேண்டிக் கொள்வதற்காகத்தான் நாங்கள் இங்கு நிற்கிறோம் எனக் கூறினர்.

நினைவில் கொள்ளுங்கள்! இந்த அன்பின் உணர்வுகள் இவர்களின் நல்லொழுக்கத்திற்கு சாட்சியாக இருப்பதுடன், மனிதனுக்கு மதிப்பளிக்கும் இவர்களின் பண்புக்கு சாட்சியாக இருப்பதுடன், காதியானிலுள்ள தர்வேஷ்கள் மிகவும் பொறுமையுடன் இங்கு வாழ்வைக் கழித்துள்ளனர் என்பதற்கும், மிகவும் அன்புடன் இங்கு வாழ்வைக் கழித்துள்ளனர் என்பதற்கும், மிக உயர்ந்த நல்லொழுத்தில் நிலைபெற்றவாறு வாழ்வைக் கழித்துள்ளனர் என்பதற்கும் ஒரு மிகப் பெரும் சாட்சியாகும். தொலைவில் இருந்தவர்களை அவர்கள் அருகில் கொண்டு வந்தனர். நற்செயல்களின் மூலமாகவும், அழகிய முறையில் நடந்து கொள்ளும் வாழ்வின்

மூலமாகவும் அவர்களுடைய உள்ளங்களிலிருந்து எல்லா சந்தேகங்களையும் நீக்கி விட்டனர்.

ஆக, இந்த தர்வேஷ்களின் தியாகங்கள், நல்லொழுக்கங்கள் நமது வழியை சீராக்கியுள்ளன. இன்றும் இவர்களை துஆக்களில் நினைவு கூருங்கள். திரும்பிச் செல்லும்போதும் இவர்களை நினைவு கூர்ந்து கொண்டே செல்லுங்கள். இறைவன் உங்களை மீண்டும் திரும்ப அழைத்து வருவான் என்ற இறைவனின் அந்த வஹியின் மீது முழுமையான நம்பிக்கை வையுங்கள். அந்த ஈமானுடன் திரும்பிச் செல்லுங்கள். நானும் உங்களுடன் மீண்டும் வரும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக! நாம் மீண்டும் மீண்டும் இங்கு வருவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்வானாக. மேலும் மீண்டும் மீண்டும் இந்த மாநாட்டின் காட்சிகள் விரிவாகிக் கொண்டிருக்கட்டுமாக! பரவிக் கொண்டிருக்கட்டுமாக! எதுவரையென்றால் **நாம் பாகிஸ்தானில் கடைசி மாநாட்டில் இரண்டரை இலட்சம் மக்களைக் கண்டோம். காதியானிலும் நாம் பத்து இலட்சம், இருபது இலட்சம் பேர்களைக் கொண்ட மாநாட்டை கொண்டாடும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக! அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!**

அஹ்மதிய்யத்தின் மாநாடுகள், திருவிழா கொண்டாட்டம் அல்ல. அஹ்மதிய்யத்தின் மாநாடுகள், மனித வாழ்க்கையின் ஒரு வலுவான தூதைக் கொண்டுள்ளன. மனிதத்துவத்தைப்

புதிதாக உயிர்ப்பிப்பதற்காக, மனிதத்துவத்தைத் துன்பங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக காதியான் மாநாடு ஒரு முன்மாதிரியாகும். இங்கு எல்லா சமுதாயங்களும் உண்மையான உள்ளத்துடனும் அன்புடனும் ஒன்றாக மாறியிருப்பதாகத் தென்படுகிறது. இங்கு ஆங்கிலேய அஹ்மதி முஸ்லிமாக இருந்தாலும், அமெரிக்க அஹ்மதி முஸ்லிமாக இருந்தாலும், ஜெர்மனிய அஹ்மதி முஸ்லிமாக இருந்தாலும், இந்திய அஹ்மதி முஸ்லிமாக இருந்தாலும் தமக்கிடையே எல்லா வித்தியாசங்களும் நீங்கக் காண்கிறார்கள்.

எனவே, உண்மையிலேயே உலகில் சமுதாயங்களின் ஒற்றுமைக்கான அடிப்படையை நிலைநாட்ட வேண்டும் என்றால், உலக சமுதாயங்களின் ஒற்றுமைக்கான அடிக்கல் இந்த மண்ணில்தான் நாட்டப்பட முடியும் என நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.

நல்ல முறையில் நடந்து கொண்ட அந்த கருணையாளர்களை துஆவில் நினைவு கூருங்கள். இந்திய அரசாங்கத்திற்கு நன்றி கூறுவதும் கடமையாகும். ஏனெனில் எவர்கள் இறையடியார்களுக்கு நன்றி செலுத்துவது இல்லையோ அவர்கள் இறைவனுக்கும் நன்று செலுத்துவதில்லை என ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நமக்குப் போதித்துள்ளார்கள். (அபூ தாவூது. கிதாபுல் அதப், பாபு ஃபீ ஷுக்ரில் மஃரூஃபி)

அதாவது, இறைவன் அப்படிப்பட்டவரின் நன்றியை ஏற்றுக் கொள்வதில்லை.

பஞ்சாப் அரசும், இந்திய அரசும் நம்முடன் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டுள்ளன. எனவே நாம் நமது துஆக்களில் எல்லா மக்களையும் நினைவில் கொள்வோம். நம்மை சுற்றியுள்ள, நம்முடன் மிகவும் உயர்ந்த முறையில் மனிதத்துவத்துடன் நடந்து கொண்ட முஸ்லிம் அல்லாதவர்களையும் நினைவில் கொள்வோம்.

காதியானில் வாழ்பவர்களையும் நினைவில் கொள்வோம். இங்கு வர முடியாமல் போன பாக்கிஸ்தான் மக்களையும் நினைவில் கொள்வோம். மனித சுதந்திரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள அந்த நாட்டையும் நினைவில் கொள்வோம். அங்குள்ள அரசியல், மார்க்க விவகாரங்களில் தலையிடுவதில் தைரியம் காட்டியுள்ளது. ஆனால் அதில் தலையிடுவது அதற்கு அழகல்ல. எங்கு இறைவனை நினைவு கூருவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதோ, எங்கு தவ்ஹீது கலிமாவை வெளிப்படுத்துவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதோ அந்த அநியாயக்காரர்களுக்காகவும் நாம் துஆ செய்வோம். அவர்களும் நமது சகோதரர்கள்தான். அவர்களின் கைகளை அல்லாஹ் அநியாயத்திலிருந்து தடுப்பானாக!

இறுதியில் நான் இறை வழியில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களுக்காக துஆவுக்காக கவனமூட்டுகின்றேன். மிகவும் அதிக நாட்களாகத்

துக்கங்களை சகித்துக் கொண்டிருக்கிறார்கள். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ - அல்லாஹ் ஒருவன் ஆவான்; முஹம்மது அவனுடைய தூதர் ஆவார் என்று அவர்கள் அறிவித்ததைத் தவிர அவர்களின் வேறு எந்தக் குற்றமும் இல்லை.

இந்தக் குற்றத்திற்காக நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பேர் சிறைச்சாலையின் துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்றனர். சில அப்பாவிகளுக்குத் தூக்கு தண்டனை கொடுக்க தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இறைவனின் நியதி அநியாயக்காரர்களின் கையிலிருந்து அந்தக் கயிற்றை நீக்கி விட்டது. ஆயினும் அவர்கள் இன்னும் சிறைச்சாலையின் துன்பங்களில் வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களையும் உங்கள் துஆக்களில் குறிப்பாக நினைவில் வையுங்கள். மனிதத்துவம் என்பது மனிதனின் அநியாயங்களிலிருந்து நிரந்தரமாக விடுதலையாகும் வண்ணம் இரு நாடுகளிலும் அத்தகைய புரட்சியை இறைவன் உருவாக்குவானாக. வாருங்கள், இப்போது நாம் துஆவில் ஈடுபடுவோம்.

சரி! நான் இப்போது அனுமதி கோருகிறேன். முபாரக், சவ் முபாரக் (வாழ்த்துகள்; நூறு வாழ்த்துகள்) என்று இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நோக்கிக் கூறியது, இனி

அஹ்மதிய்யா ஜமாஅத்தை விரும்பும் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு முபாரக், சவ் முபாரக் (வாழ்த்துகள்; நூறு வாழ்த்துகள்) என்ற சொற்களில் வாழ்த்துகள் தெரிவிக்கும் நாட்கள் வரவிருக்கின்றன என்பதைத் தெரிவிக்கிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூறு ஆண்டு வரலாறு முழுமை அடைந்ததையொட்டி நாம் ஒருவர் மற்றவருக்கு முபாரக், சவ் முபாரக் (வாழ்த்துகள்; நூறு வாழ்த்துகள்) என்ற சொற்களில் வாழ்த்துகள் கூறும் நற்பேற்றை இறைவன் நமக்கு வழங்கினான். இன்று இந்த ஆண்டு மாநாட்டுக்கும் நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. இன்று நான் முபாரக், சவ் முபாரக் (வாழ்த்துகள்; நூறு வாழ்த்துகள்) என்ற சொற்களிலேயே வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் நம்மைக் கொண்டு வந்தால் நாம் மீண்டும் சந்திப்போம். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்ம(த்)துல்லாஹ்!

☆ ☆ ☆